www.padippakam.com

# நற்றமிழ்

விலை உரு 6.00 இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் - அறிஞர் சாலை இளந்திரையனார்

ஆண்டு-சு திங்கள் - க தி.ஆ.உ0நஎ கும்பம் (மாசி) (15-2-2006)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் **மு. இறைவிழியன்**
இணையாசிரியர்கள் : புலவர் **அரங்க. நடராசன்**, புலவர் **செ. இராமலிங்கன்**



8-1-2006 இல் நடந்த பாராட்டு விழாவில் **'தமிழ்மாமணி'** விருது அளித்த புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு **ந. அரங்கசாமி** அவர்கட்கு விருது பெற்ற புலவர் **மு. இறைவிழியனார்** அவர்கள் பொன்னாடை போர்த்தியும் கேடயம் வழங்கியும் பாராட்டுகிறார். வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு **ஆ. நமச்சிவாயம்** அவர்களும், பா.ம.க. தலைவர் குரு. **பன்னீர்ச்செல்வம்** அவர்களும் உடன் உள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# புதுச்சேரி மாநிலத்துக்குத் தனிக் கல்வி வாரியம்

புதுச்சேரி மாநிலத்துக்குத் தனிக் கல்வி வாரியம் அமைக்க இந்திய நடுவணரசு அனுமதி அளித்துள்ளது. இஃது அரிய வாய்ப்பே! இதற்காக முயன்று பெற்ற புதுவை மாநில அரசையும் முதல்வர் மாண்மிகு ந. அரங்கசாமி அவர்களையும் பாராட்டுகின்றோம்.

ஆனால் பிள்ளையார் பிடிக்கக் குரங்காக ஆனது என்பது போலத் தனிக்கல்வி வாரியத்தைத் தாய்மொழி அழிப்புக்குப் பயன்படுத்தல் கூடாது. தமிழோ, மலையாளமோ, தெலுங்கோ அவரவர் பகுதியில் அவரவர் தாய்மொழிக்கே முதலிடம் தருதல் வேண்டும். தொடக்கத்தில் தொடக்கப் பள்ளிகளிலும் தொடர்ந்து பட்டப்படிப்பு, தொழில்நுட்பப் படிப்பு என எல்லாத் துறையிலும் தாய்மொழி வழிக் கல்வியே கற்பிக்கப்படுமாறு வாரியம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் நல்லுளமும் கொண்ட கல்வியாளர், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் அமைத்துப் பாடத் திட்டங்களையும் பாடநூல்களையும் உருவாக்குதல் வேண்டும். தாய்மொழிக் கல்வியை வளர்ப்பது மட்டுமன்று தரமான கல்வியைத் தருவதற்கும் இஃது ஒரு வாய்ப்பாகும்.

இப்பணியில் அரசு தவறு செய்யுமேயானால் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். எதிகால வரலாறு பழி தூற்றும். எனவே அமைச்சர் பெரு மக்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் அரசின் அலுவலர்களை யும் அரசியல்வாணர்களையும் பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம், அறிவுறுத்துகிறோம் - ஆசிரியர்

## நற்றமிழன்பர் புலவர் ஒருவரின் நெறிமடல்

சிறுவேண்டுகோள். சிறு இதழில் எல்லோருக்கும் வாய்ப்பு அளித்தல் வேண்டும். சிலர் தாங்களே இதழை நிறைவுச் செய்தல் கூடாது. எனக்குத் தெரிந்த புலவர் ஒருவர் மட்டும் 14 பாடல்களை எழுதி யுள்ளார். அவை : 138, 139, 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 148, 149, 150, 151 இதழ் 15-1-2006 இல்

இத்தவறுகள் நீங்கவே உங்கள் பார்வைக்கு எழுதினேன்.

- ஒரு புலவர்.

(குறிப்பு : மேற்கண்ட செய்தி உண்மையெனில் உரியவர் உரியவாறு நடந்து இதழ் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம். இஃது எல்லார்க்கும் பாடமே! - ஆசிரியர்)

படிப்பகம்

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலையர் (தொடர்ச்சி)

தேவர்ப்பராஅய முன்னிலைக்கண்ணே வரும் ஒத்தாழிசைக் கலியின் பிரிவாகிய கொச்சக ஒருபோகு என்னும் கலிப்பா தரவு உறுப்பு இன்றித் தாழிசை பெற்றும், தாழிசைஉறுப்பு இன்றித் தரவு உடைத்தாகியும், அம்போதரங்க உறுப்பு இன்றியும், தனிச்சொல் இல்லாமலும், சுரிதக உறுப்பு இன்றியும் நாற்சீர் அடியினும் மிக்கு ஐஞ்சீரடி முதலாக ஓங்கி நடைபெற்றும் இனி ஒருபோகின் மற்றொருவகையாகிய முப்பதடி. சிற்றெல்லை பதினைந்தடி என்பது பொருந்துவதாக இல்லை.

அம்போதரங்க ஒருபோகு தரவு கொச்சகம் அராகம் சிற்றெண் சுரிதகம் என்ற ஐந்து உறுப்பிக்களை உடையதாய் வரும். கொச்சகங்கள் வெண்பாவாகவும் வரும்

**அம்போ தரங்கம் அறுபதிற்று அடித்தே;**
**செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை - 151**

செம்பால் - நேர்பாதி, வாரம் - வருதல்

**எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்**
**அடக்கியல் வாரமோடு அந்நிலைக்கு உரித்தே - 152**

இதுகாறும் கூறியவாற்றால்,

அகநிலை ஒத்தாழிசைக்கலி நான்கடி முதல் பன்னிரண்டடி வரை நீளும் தரவும், தரவைவிட அடிகளில் குறைந்த மூன்று தாழிசையும் தனிச்சொல்லும் தரவை ஒத்தோ அதனினும் குறைந்தோ வரும் அடிகளை உடைய சுரிதகமும் பெற்று வருதல் பெரும்பான்மை எனவும்,

தேவபாணி ஒத்தாழிசை வண்ணகம் ஒருபோகு என இருவகைப்படும் எனவும்,

வண்ணக ஒத்தாழிசை 4, 6, 8 என்ற இரட்டைப்படை எண்களில் அமைந்த தரவும் தரவில் சுருங்கிய ஒத்த மூன்று தாழிசையும் பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் எனப்படும் அம்போதரங்கமும் தரவினை ஒத்த அடிகளை உடைய சுரிதகமும் பெற்றுவரும் எனவும்,

தனிச்சொல் இல்லாதவழி அம்போதரங்கம் இன்றியும் தரவு தாழிசை சுரிதகம் என்ற மூன்று உறுப்போடும் வரும் எனவும்,

தேவபாணியின் பிறிதொருவகையாகிய ஒருபோகின் இருவகையினுள் கொச்சக ஒருபோகு பலதிறப்பட்டு யாப்பினும் பொருளினும் வேறுபட்டு வரும் எனவும்,

அம்போதரங்க ஒருபோகு தரவு, கொச்சகம் அராகம், சிற்றெண், சுரிதகம் இவற்றொடு வரும் எனவும் அறிகிறோம்.

வாழ்த்தியல் முதலாக எல்லாப் பொருள்மேலும் வரும் நெடுவெண்பாட்டினைப் போலாது அகத்திணை ஒன்றையே பற்றியும்

www.padippakam.com



தரவு உறுப்புப்போல ஒரே உறுப்புப்பற்றியும் ஒரோவழிப் பிறதளை விரவியும் ஒரோவழி ஐஞ்சீரடி விரவியும், ஒத்தாழிசைக்கலிப்பாவிற்கு ஓதிய பன்னிரண்டு அடிக்கும் வண்ணகத்திற்கு ஓதிய எட்டடிக்கும் இடைப்பட்ட பத்தடியைத் தன் சிறுமைக்கு எல்லையாகக் கொண்டு வருவது கலிவெண்பா என்ற கலிப்பா ஆகும். கலிஉறுப்பிற்கு ஓதிய யாப்பியல்புகளாலும் பொருள் அமைதியாலும் வேறுபட்டு வருவதாகும்.

பொருளமைதியில் வேறுபடுதலாவது தேவர்ப்பராஅய முன்னிலைக்கண் வருதலே அன்றி ஏனைய இடத்ததாகி வருதலும் மக்களைப் பராவி வருதலும் அகமும் புறமுமாகிய பொருளைத் தழுவி வருதலும் பிறவும் ஆம்.

**தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்**
**தாழிசை இன்றித் தரவுடைத்து ஆகியும்**
**எண்ணிடை யிட்டுச் சின்னம் இன்றியும்**
**அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்**
**யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது**
**கொச்சக ஒருபோகு ஆகும் என்ப - 149**

(எ.டு) பரணிச் செய்யுள் - தாழிசை தனித்து வந்தது.

யானைத்தோல் போர்த்து சிலப். வேட்டுவவரி
வரிவளைக்கை வாள்ஏந்தி - தாழிசை மூன்று அடுக்கி வந்தது.

சங்கமும் சக்கரமும்
நீறணிந்த திருமேனி - தரவு மட்டும் வந்தது.

மூவுலகும் ஈரடியான் - தாழிசை அடிநிமிர்ந்து வந்தது.

மழைநுழைந்து - தரவுஅடி நிமிர்ந்து வந்தது.

முழங்குதிரை - மக்களைப் பரவி வந்தது.

ஆறறி அந்தணர் (கலி 1) - ஒத்தாழிசைபோல வந்த தேவபாணிக் கொச்சகம்.

மாமலர் முண்டகம் (கலி 133) - தரவும் எண்ணும் சுரிதகமும் பெற்று அகப்பொருட்டாய் வந்தது.

பால்மருள் மருப்பின் (கலி 23) - தரவும் சுரிதகமும் பெற்ற கொச்சக ஒருபோகு.

செவ்விய தீவிய (கலி 19) - வெண்பா யாப்பின் வந்த தரவிணைக் கொச்சகம்.

நிரைதிமில் களிறாக (கலி 149) - மூன்றடித்தரவு நான்கடித்தாழிசை இரண்டு தனிச்சொல் சுரிதகம் பெற்று வேறுபட்டு வந்தது.

அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகும் கொச்சக ஒருபோகிற்குச் சிறுமை பத்தடி; பெருமை இருபதடி எனப்படும்.

**ஒருபான் சிறுமை; இரட்டி அதன் உயர்பே - 150**

- தொடரும்

www.padippakam.com



# மண்ணுலக வாழ்வு : வள்ளுவரும் பிளேட்டோவும்

முனைவர் ப. மருதநாயகம், இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் (தொடர்ச்சி)

இறப்பிற்குப் பின் ஆன்மாவின் வாழ்வு பற்றியும் இவ்வுலக நல்வினை, தீவினைக்கேற்ப மறுபிறவிகள் அமையும் என்பது பற்றியும் பழந்தமிழ்ப் புலவர்களின் நிலை வியப்புக்குரியது. மறுமையென்று ஒன்றிருப்பினும் இல்லாவிடினும் அறவாழ்வு வாழ்தலே மாந்தரின் கடமையென்ற கருத்து பலபுலவர்களாலும் முன்வைக்கப்படுகிறது.

**இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே. (புறநானூறு 134)**

**கடாஅ யானைக் கலிமான் பேகன்**
**எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென**
**மறுமை நோக்கின்றோ அன்றே**
**பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண் மையே.**
**(புறநானூறு 141)**

கோப்பெருஞ்சோழனுடைய பாடலொன்று

**அறவினையைச் செய்வோமா செய்யாமல் இருப்போமா**
**வென்று எண்ணி ஐயம் நீங்காதவர்கள் அழுக்கு நிறைந்த**
**காட்சி நீங்காத, உள்ளத்தினை உடைய தெளிவில்லாதோர்**
**யானைவேட்டைக்குப்போவோன் யானையையும் எளிதாகப்**
**பெறலாம்; சிறு பறவை வேட்டைக்குப் போவோன்**
**அது கிடைக்காது வெறுங்கையின்னாக வரலாம்**
**அதனால் உயர்ந்த நோக்குடைய உயர்ந்தோர்க்குத் தாம்**
**செய்த நல்வினைகளுக்கான பயனைத் தேவருலகில்**
**அனுபவித்தலும் கூடும்; அவ்வுலக இன்பம் இல்லையாயின்**
**மறுபிறவியில் இன்பம் எய்தவும் கூடும்; மறுபிறவி என்பது**
**இல்லையாயின் இமயத்தின்கோடு ஓங்கினாற்போன்ற**
**தமது புகழை நிலைநாட்டித் தீதில்லாத உடலோடு**
**கூடிநின்று இறத்தல் மிகத் தலையாயது அதனால்**
**நல்வினை செய்தல் சிறப்புடையது. (புறநானூறு 214)**

என்று கூறுதல் கருதத்தக்கது. நல்வினைகளால் இப்பிறவியில் இன்பம் கிடைப்பது. விண்ணுலகில் இடம் பெறுவது, மறுபிறவியில் நலம் உறுவது ஆகிய எப்பயனும் இல்லையாயினும் அவற்றைச் செய்து புகழ் பெறுதலே அறிவுடைமையாகும் எனும் முடிவின் அருமையைச் சொல்லத்தேவையில்லை.

www.padippakam.com



செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐயம் அறாஅர் சகடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில்லோரே

எனும் அடிகள் கவிஞனின் கருத்தை அழுத்தமாகக் கூறும்.

மரபுவழி வந்த கிரேக்க அறக்கோட்பாட்டின்படி நண்பர்களுக்கு உதவுவதும் பகைவர்களுக்குத் தீங்கிழைப்பதும் சரியென்று நம்பப் பெற்ற காலத்தைச் சேர்ந்தவர் சோக்ரதர். பாலிமார்கசு என்பார் இந்நம்பிக்கையை வெளியிட்டபோது சோக்ரதர் இதை மறுத்து நம்மை வெறுப்பார்க்கும் நாம் நலம் செய்யவேண்டுமென்றும் அறம் ஒன்றே தன்னிலேயே நன்மையுடையது என்றும் உறுதியாகச் சொல்வார்.

வெப்பம் குளிர்ச்சி தருவதில்லை; நீரற்ற வறட்சி ஈரம் தருவதில்லை; பிறர்க்குத் துன்பம் இழைப்பது நற்பண்பின் இயல்பு ஆகாது. நண்பர்களுக்கோ மற்றவர்க்கோ தீமை செய்வதென்பது நேர்மையுடையார் செயலன்று; அவர்களுக்கு மாறானவர் செயலாகும். (கார்ன்போர்டு 14)

பழிக்குப்பழி வாங்குதலில் தவறில்லையென்றும் பெரும்பாலோர் கொள்கை பற்றிய தமது எண்ணங்களைச் சோக்ரதர் சிறையிலிருந்த போதும் வற்புறுத்துதல் வழக்கம். - தொடரும்

புதுவைப் பல்கலைக் கழகத்தில்

தமிழ் புறக்கணிக்கப்படுவதை இந்தி திணிக்கப்படுவதைக் கண்டித்து

## மாபெரு முழக்கப் போராட்டம்

25-1-2006 இல் மாலையில் புதுச்சேரிப் பழைய திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில், தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத்தின் புதுவை மாநில ஒருங்கிணைப்பாளர் பொறிஞர் ந.மு. தமிழ்மணி அவர்கள் தலைமையில் நடந்தது. விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத்தின் தலைவருமான இளந்தலைவர் தொல். திருமாவளவனார் முழக்கப் போராட்டத்தில் கலந்து கொண்டு சீரிய சிறப்புரையாற்றினார். பல்வேறு அமைப்புக்களின் தலைவர்கள் உணர்ச்சியுரையையாற்றினர். முழக்கப் போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றதுடன் தமிழுக்கு உரிய இடம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் முடிவு செய்யப்பட்டது. நிகழ்வில் தமிழ்மாமணி விருது பெற்ற புலவர் மு. இறைவிழியனாரைப் பாராட்டித் தொல். திருமாவளவனார் பொன்னாடை போர்த்திப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



# தொடுத்தலும் விடுத்தலும்

**வினா - 1 :** 8-1-06 அன்று தங்களுக்கான பாராட்டு விழாவினிடையே திரு. ப. அருளியார் அவர்கள்,

'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை' என்னும் ஔவையாரின் பாடல்,

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு இங்கு
அல்லார்க்கும் பெய்யும் மழை' என்றிருப்பதே பொருத்தம் எனக் கருத்துரைத்தார்கள்.

'நல்லார் X அல்லார்' என்னும் முரண்

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் என்னும் அடக்கிக் கொளல் வேண்டும்.

என்னும் பாடற்பகுதியிலும் காணப்படுகின்றது

'நல்லார் உளரேல் அவர் பொருட்டு அல்லார்க்கும் பெய்யும் மழை' என்று இருப்பின் இறந்தது தழீஇய எச்ச உம்மையாகக் கொள்ளுதல் தகும்.

'ஒருவர்' என ஒரு சொல்லாட்சி இடையில் இடம் பெற்றுள்ளமை யின், எல்லார்க்கும் என முற்றும்மைப் பொருள்கோடலே தகும்.

தங்கள் இது குறித்துத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**- பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.**

**விடை - 1 :** "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

ஔவையாரின் முழுப் பாடல் இது.

இதில் நெல் X புல் என அமைந்திருக்கும் முரண்போல் நல்லார் X அல்லார் என முரண் நேராய்ச் சுட்டப்படுதலே சரியாகும் என அருளியார் குறிப்பிடுதல் முறையாகவே தோன்றுகிறது.

ஆனால், பண்டைய புலவர் பெருமக்கள் ஒரு மரபைக் கையாண்டுள்ளனர். ஒருவரைப் பற்றிய சிறந்த கருத்தினைக் குறிப்பிடுங்கால் அவரின் பெயரைச் சுட்டிக் கூறலும் ஒருவரின் முரணிய கருத்தைக் குறிப்பிடுங்கால் அவரின் பெயரைச் சுட்டாமல் பொதுவாகக் கூறலும் அன்னார் மேற்கொண்ட மரபாக இருந்துள்ளது. அந்த வகையில் நல்லாரைக் குறிப்பிட்டவர் அல்லாரைக் குறிப்பிட விரும்பாமல் எல்லாரிலும் அடக்கியிருக்கலாம்.

www.padippakam.com



மேலும் ‘குணம் நாடிக் குற்றமும் நாடி’ எனக் குறள் குறிப்பிட்டதுபோல் நல்லார்க்கும் அல்லார்க்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளார்க்கும் அம்மழை உதவுவதால் அவரையும் சேர்க்கும் நோக்கில் எல்லார்க்கும் என்ற சொல்லை ஔவையார் பயன்படுத்தியிருக்கலாம்.

**வினா - 2 : ‘எத்துணை - எத்தனை’ இத்தொடரினை எவ்வெவ்விடத்தின் பயன்படுத்துவது?** **- அதலை இராமன், மதுரை.**

**வினா - 2 :** எத்துணை - எவ்வளவு
எத்தனை - எவ்வளவு
துணை - அளவு
தனை - அளவு

அகர முதலி தரும் பொருள் இவையே. ஆனால் தன் - தனி - தனை - தனிமை என்ற நிலையில் பொருள் கொள்ளின் தனை என்பதை எண்ணிக் கொள்ளப்படும் பொருள்களுக்கு, செயல்களுக்குப் பயன் படுத்தலாம். அல்லாதவற்றுக்குத் துணையைப் பயன்படுத்தலாம்.

சான்று : 1) எத்தனை மரங்கள்
எத்தனை பரிசுகள்
எத்தனை வெற்றிகள்

2) எத்துணைப் பெருமை
எத்துணை மழை
எத்துணை உதவி

- இறைவிழியன்

## வாழ்நாள் உறுப்பினர்கள்

1. **திரு. மு. சனார்த்தனி பரந்தாமன்**
35, மாரியம்மன் கோயில் தெரு,
மீனாட்சிப்பேட்டை, புதுச்சேரி - 9.

2. **திரு. வெ. இரகுராமன், ஆசிரியர்**
30, பின்னாச்சிக்குப்பம், சேலியமேடு (அ),
பாகூர் (வழி) - 607 402.

3. **திரு. க. முருகப்பன்**
42, 10-வது குறுக்குத் தெரு,
பிருந்தாவனம், புதுச்சேரி-13.

4. **திரு. தெ. நடராசன், மேலாளர் ஓய்வு**
எண். 5, இரண்டாந் தெரு, பாரதிதாசன் நகர்,
முதலியார்பேட்டை, புதுச்சேரி - 605 004.

*நன்றி!*

- ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com



# நூல் திறனாய்வுப் போட்டி

**"ஒரு விஞ்ஞானப்பார்வையிலிருந்து..."** இது **எழுத்தாளர் சுஜாதா** எழுதிய நூல். இந்நூலுக்கு மறுப்பாகத் தோழர் **ந. வெற்றியழகன், "உண்மை"** இதழில் **"சுஜாதாவின் கோணல்பார்வை"** என்னும் தலைப்பில் எழுதிய மறுப்புக் கட்டுரைகள் சிறு நூலாக வெளியிடப் பட்டுள்ளது. இந்நூல் பற்றிய திறனாய்வுப் போட்டி ஒன்றினை நடத்த விரும்புகிறோம்.

விமர்சனம் கையெழுத்தில், முழுத்தாளில் இரு பக்கங்களும், தட்டச்சில் ஒரு பக்க அளவும் இருக்கலாம்.

*(பரிசுகள் நூல்களாக)*

**முதல் பரிசு உருவா 150/-**

**இரண்டாம் பரிசு உருவா 100/-**

**மூன்றாம் பரிசு உருவா 50/-**

நூலினை அஞ்சலில் பெற உருவா 12/-

***அனுப்பு வேண்டிய முகவரி***

**பி.இரெ.அரசெழிலன்,**

**அறிவுச்சுடர் வெளியீடு,**

4/7, முருகன் இல்லம், பாரதிபுரம், முதல் தெரு, கைலாசபுரம், திருச்சி-14.

***நூல் திறனாய்வு அனுப்ப வேண்டிய முகவரி***

**"நாளை விடியும்"**

4/7, முருகன் இல்லம், பாரதிபுரம், முதல் தெரு, கைலாசபுரம், திருச்சி-14.

**திறனாய்வு அனுப்பக் கடைசி நாள்**

**31.03.2006**

## 'வளரும் தமிழ் உலகம்' ஆசிரியர் முனைவர் மு.ச. சிவம் அவர்களின் வாழ்த்து

நற்றமிழ்த் தொண்டினை நாளும் இயற்றிவரும் தங்களுக்குத் தமிழ்மாமணி விருது கிடைத்ததையறிந்து மிகப் பெரிதும் மகிழ்கின்றேன். தகுதியுடையோர்க்குத் தகுதியான பரிசும் உதவித் தொகையும் நல்கி வரும் புதுவை அரசையும் பாராட்டுகிறேன். தங்கள் தொண்டு நாளும் வளர்க!

www.padippakam.com



# தொல்காப்பியர் பிறந்தநாள் கணிப்பு

## (கட்டுரைச் சுருக்கம்) – பேராசிரியர் இரா. மதிவாணன்

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் கி.மு. 700 - 900 காலத்தவராகலாம் என மொழிஞாயிறு பாவாணர் குறிப்பிட்டார். புத்தர் காலமாகிய கி.மு. 600-க்குப் பிறகு ஐந்திர இலக்கணம் பயிலப்படவில்லை. எனவே ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் கி.மு. 600-க்கு முந்தியவர்.

2. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்துத் தலைமைப் புலவராகிய மாங்குடி மருதனார் தனக்கும் முந்தைய "தொல்லாணை நல்லாசிரியர் புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் நிலந்தரு திருவின் பாண்டியனைப்" பாராட்டுகிறார். தொல்காப்பியத்தை அரங்கேற்றிய மன்னன் இவன். 1920-இல் வெளிவந்த பாண்டியர் வரலாற்றுக்குறிப்புகளைக் கலியாண்டு முதலாகக்கூறும் நன்குடிவேளிர் வரலாறு எனும் செய்யுள் நூல் கி.மு. 901-இல் (கலியாண்டு 2201) ஏற்பட்ட கடல்கோளைக் குறிப்பிட்டு கி.மு. 6 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளில் வடவாரியர் சூழ்ச்சிகளால் மூவேந்தர் ஆட்சியில் குழப்பம் விளைந்தது என்று கூறுகிறது. இந்தக் கடல்கோளுக்குப் பிறகு மணவூரில் தங்கி மக்களுக்கு நிலம் தந்த பேருதவி நிலந்தரு திருவின் பாண்டியன் காலமாகிய கி.மு. 9 ஆம் நூற்றாண்டில் தொல்காப்பியர் வாழ்ந்திருக்க வேண்டும்.

3. இந்தக் கடல்கோளுக்குப் பிறகு முந்து நூல் தேடிப் பயின்று மாணாக்கர்க்குக் கற்பிக்க அதங்கோட்டாசானுக்கு 40 ஆண்டானது என்றால் 5 அகவையில் அரிச்சுவடி தொடங்கிய தொல்காப்பியர் கி.மு. 865-ல் பிறந்தவராக வேண்டும். குறைந்த பக்கம் என்றாலும் 30 அகவையில் பாண்டியன் அவையில் தொல்காப்பியம் அரங்கேறிய ஆண்டு கி.மு. 835 ஆக இருக்க வேண்டும். ஏனெனில் நன்குடிவேளிர் வரலாறு கி.மு. 834-ல் கொற்கையிலாண்ட கூழைப்பாண்டியன் பெயரைக் குறிப்பிடுகிறது. இந்தக் கால வரம்புக்குள் தொல்காப்பியம் அரங்கேறியிருக்க வேண்டும். கொற்கையிலிருந்த பாண்டியன் மதுரைக்கு வந்த பிறகு கி.மு. 504 ஆண்டிலும் ஒரு கடல்கோள் நிகழ்ந்திருக்கிறது. அதிலும் தொல்காப்பியம் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

4. ஆண்டு தோறும் இளவேனிற்பருவத்து மேழத்திங்கள் முழுமதி (சித்திரை பௌர்ணமி) நாளில் மதுரையில் தமிழ்க் கழகம் கூடுவது வழக்கம். இதனை

"நிலன்நாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பருவத்து"

www.padippakam.com



எனக் கலித்தொகையும் குறிப்பிடுகிறது. எனவே தொல்காப்பிய அரங்கேற்றம் இதே நாளில் நிகழ்ந்திருக்க வேண்டும். உலகத்துச் சான்றோர் பலர்க்கும் பிறந்தநாள் சிறந்தநாள் மறைந்த நாள் ஆகியவை ஒரே நாளாக இருக்கக் காண்கிறோம். கௌதம புத்தர், சேக்சுபியர் போன்றோர்க்குப் பிறந்தநாளும் மறைந்த நாளும் ஒன்றாகவே அமைந்தன. தொல்காப்பியப் பெருமகனாரும் கி.மு. 865 மேழத்திங்கள் முழுமதி நாளன்று பிறந்தார் எனக் கொள்ளலாம். தொல்காப்பியர் திருநாள் கொண்டாடுவது மிக மிக அகத்தியமானது என்பதால் தமிழறிஞர்களின் பார்வைக்கு என் கருதுகோளைப் பணிவொடு முன் வைக்கிறேன்.

5. கொற்கையில் புறப்பட்ட நாவாய் கங்கை வழியாக யமுனை வரை சென்றது என்றும் கி.மு. 1000 அளவிலேயே ஆரியப்பார்ப்பனர் கொற்கையில் காணப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. தமிழர் நான்மறை ஆரியர் நால்வேதங்களுக்கு முந்தையது என நச்சிகினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

அவர் கூறும் தாலவாகரம் எனும் தமிழ்மறை (தாலம் - பனை, தாலவம் - தாலவாகம் - தாலவாகரம்) வடமொழியில் கேன உபநிடதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என The Dravidian Lineage - M. Imanuvel - 2002 என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து தமிழர் நான்மறை உபநிடதங்களாக உருவெடுத்த வரலாறு தெரிகிறது. திருவிதாங்கோட்டிற்குத் தெற்கிலுள்ள விளவங்கோடு வட்டத்திலுள்ள அதங்கோடு என்னும் சிற்றூரே தொல்காப்பியரின் பிறந்த ஊர் எனலாம். தமிழர் நான்மறை உபநிடதங்களான காலம் கி.மு. 800 - 500 என மக்குடானால்டு நுலிலிருந்து தெரிகிறது. எனவே தமிழர் நான்மறை கி.மு. 800 அளவில் மறைந்தது. ஆதலால் தமிழ்நான்மறை கற்ற அதங்கோட்டாசான் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் தான் வாழ்ந்திருக்க வேண்டும். இதன் விரிவை தொல்காப்பியர் காலம் எனும் என் நூலில் காண்க.

# புத்தகம் மற்றும் கல்வியியல் மென்பொருள் கண்காட்சி

புதுச்சேரி அரசின் கலை, பண்பாட்டுத் துறையின் சார்பில் கடற்கரைச் சாலை, காந்தி திடலில் 23 சனவரி 2006 முதல் 03 பிப்பிரவரி 2006 வரையில் புத்தகம் மற்றும் கல்வியியல் மென்பொருள் கண்காட்சி நடைபெற்றது.

புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் எம்.எம் இலகேரா அவர்கள் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார். செயலாளர் பா.வே. செல்வராசு அவர்கள் வாழ்த்துரை வழங்க, இயக்குநர் சு. சுமதி அவர்கள் நன்றியுரைத்தார்.

www.padippakam.com



# புலவர் வி.பொ.ப.வின் 'தமிழிலக்கியச் சொல் அகரமுதலி'

உயிருள்ள நல்ல உடல் நாள்தோறும் வேண்டாதவற்றைத் தள்ளி வேண்டியவற்றைக் கொள்ளும். இத்தள்ளலும் கொள்ளலும் உயிர்ப்புள்ள அனைத்திலும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இதற்கு இடந்தருபவை வீழும், மறையும். இப்பொது உண்மை மொழிகளுக்கும் பொருந்தும்.

உலகச் செவ்வியல் மொழிகளில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரும் தனிச்சிறப்பு நம் தமிழ்மொழிக்கு உண்டு. நெடிய வரலாற்றில் பலவகைத் தாக்கங்களுக்கு ஆட்பட்டபோதும் உருச்சிதையாமல் காலந்தோறும் புதுப் பொலிவு பெற்று புதிய புதிய உள்ளடக்கங்களை உணர்த்த வல்லதாய்த் தமிழ் மொழி விளங்குவதற்குக் காரணம் வேண்டாத வறறைத் தள்ளி, வேண்டியவற்றைக் கொள்ளும் அதன் உயிர்ப்பண்பே ஆகும்.

சொற்களின் பொருள் மாற மாற, விரிய விரிய, புதிய சொற்கள் தோன்றத் தோன்ற அகரமுதலிகளின் தேவை அதிகமாகிக் கொண்டே போகும். பழைய அகர முதலிகள் புதுக்கோலம் பூணுவதும், புதிய அகரமுதலிகள் பிறப்பெடுப்பதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டிய பணிகள். அப்பணிகளை நிறைவேற்றுவதற்கென்றே நிலையான தனித்துறைகள், பலமொழிகளுக்குப் பலநாடுகளில் உள்ளன. அகரமுதலி இயல் அறிவியல் அணுகுமுறைகளோடு தனிக் கல்வியாகக் கற்பிக்கப்படுகின்றது. அகரமுதலியின் வகைமைக்கேற்ப எவ்வெச்சொற்கள் எவ்வெவ்வாறு அளிக்கப்பட வேண்டுமென்னும் வரன்முறைகள் செய்யப்பட்டுள்ளன. ஆங்கில அறிவு பெற்றிருந்தும் அகரமுதலியியல் நெறிமுறைகளை அதிகம் அறிய வாய்ப்பில்லாத வி.பொ.ப. உருவாக்கி வெளிவந்த 'வேலா பிறமொழி தமிழ் அகர முதலி' குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியதாய் அமைந்தது. இப்பொழுது அவரின் இன்னொரு அகரமுதலி உங்கள் கைகளில்!

'நம் வி.பொ.ப' என நற்றமிழ்ப் பற்றாளர் பலரும் உள்ளன்போடு உரிமை பாராட்டும் தன்மானத் தனித்தமிழ்மறவர் வி.பொ. பழனிவேலனார், தொண்ணூறாம் அகவை நிறைந்த நிலையிலும் தொண்டு செய்யச் சளைக்காதவர். பள்ளிப்பருவந்தொட்டே பகுத்தறிவு அவர் வாழ்வியல் ஆனது. தமிழறிஞர் சாமிசிதம்பரனாரின் மாணவர். அவரோடு முதல் சுயமரியாதை மாநாட்டில் (1929 செங்கற்பட்டு) கலந்து கொண்டவர். சாதிய சமயக் கடவுள் மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறி வதில் பெரியார் நெறியினர். பேராசிரியர் இலக்குவனாரின் பள்ளித் தோழர். அவரோடு 1948-இல் மூன்றுமாதம் விடுப்புப் பெற்றுத் தென்

www.padippakam.com



தமிழ்நாட்டில் 'தமிழர் மறுமலர்ச்சிச் சொற்பொழிவுச் சுற்றுலா' மேற்கொண்டவர். தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் தூயதமிழ் பரப்பும் பணியைத் தொடர்ந்து செய்தவர். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தலைமையில் உலகத் தமிழ்க்கழகத்தில் பணியாற்றியவர். தனித்தமிழ், பகுத்தறிவு, பொதுவுடைமை என்னும் மூன்று கொள்கைகளையும் முன்னெடுத்துச் செல்லும் தமிழியக்கத்தின் தலைவர்களில் ஒருவர்.

> 'மடமை யிருள்நீக்கி மாத்தமிழ் தூய்தாக்கி
> உடைமை பொதுவாக்கு வோம்'

என்பது அவர் குறள், குரல்!

ஆசிரியர் சாமிசிதம்பரனாரால் தன்மானமும் தமிழ்ப்பற்றும் ஊட்டப்பெற்ற வி.பொ.ப. தன்னிடம் படித்தவர்களையும் பழகியவர்களையும் தனித்தமிழ்ப் பற்றாளராகவும் பகுத்தறிவு நெறியினராகவும் மாற்றியமைத்த வினையாண்மையர்.

வேலன் சிந்தனைப் பூங்கொத்து, மொழித்தூய்மை தேவையா? திருமணப்பரிசு, திருத்துறைக்குறள், ஏழைகள் வாழ்வு மலர, இந்திய ஆட்சிமுறை எங்ஙனம் அமைதல் வேண்டும்? முதலிய பல நூல்களை இயற்றிய நூலாசிரியர். திருக்குறளுக்கும் புலவர் குழந்தையின் இராவண காவியத்தின் சில பகுதிகளுக்கும் உரை வரைந்த உரையாசிரியர்.

மாணவர் நலனில் மிகுந்த ஈடுபாடுகொண்டு 'மாணாக்கன்' என்னும் பெயரில் இதழ் நடத்திய வி.பொ.ப. அவர்கள் மாணவர்களும் மற்றவர்களும் இடர்ப்பாடின்றி இலக்கியம் பயிலப் பயன்படும் வகையில் பல்லாண்டுகளுக்கு முன்னரே தொகுத்து வைத்திருந்த எழுத்துப்படியே இப்போது 'தமிழிலக்கியச் சொல் அகரமுதலி' என்ற பெயரில் உங்கள் கைகளில் தவழ்கின்றது. அகரமுதலியியல் நெறிமுறைகளை இதனுள் பொருத்திப்பார்த்து எவரும் இடர்ப்பட வேண்டியதில்லை. எளிய முறையில் பழந்தமிழ் இலக்கியங்கற்க இவ்வகரமுதலி பெரிதும் பயன்படும்.

முதுபெரும் புலவர் வி.பொ.ப.வின் மீது மிகப்பெரும் ஈடுபாடு கொண்ட இனிய நண்பர் திருவள்ளுவரடிமை முருகு அவர்கள் பொருட்செலவைப் பொருட்படுத்தாது வி.பொ.ப. அவர்களின் தொண்ணூறாம் அகவை நிறைவைப் போற்றி இந்நூலை வெளியிடுகிறார். திருக்குறளைப் பயின்று பயின்று அதன் அருள்சிறப்பில் ஆழ்ந்து மயங்கித் தன்னைத் திருவள்ளுவரடிமையாகவே ஆக்கிக் கொண்டவர் முருகு அவர்கள். திருக்குறள் இயக்கமாக விளங்கும் அவர் பன்னூலாசிரியர். இன்னும் எத்தனையோ நற்பணிகளாற்ற வேண்டுமென்ற எண்ண முடையவர். அப்பணிக்குத் துணைசெய்யும் வகையில் அவர் வெளியிடும் இந்நூலை வாங்கிப் பயன்கொள்ளத் தமிழுலகத்தை வேண்டுகிறேன்.

- முனைவர் இரா. இளவரசு.

www.padippakam.com



## 'இலக்கியப் பொழில்' தொடக்க விழாவும் தமிழறிஞர்கட்குப் பாராட்டு விழாவும்.

தி.ஆ. ௨0௩௬ நளி ௨௭ - ஆம் நாள் (12-12-2005) புதுவை மீட்பரின் அன்னை இல்லத்தில் தமிழ்மாமணி மன்னர்மன்னன் அவர்கள் தலைமையில் இலக்கியப் பொழில் தொடக்க விழாவும் முதுபெரும்புலவர் அந்தாதி அரசர் அரியபுத்திரனார், தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார் ஆகியோர்க்கும் பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன. வரவேற்புரையைச் சிவ. இளங்கோவும், தொடக்கவுரையைத் தொழில் முனைவர் புரவலர் பெ. பராங்குசமும் வழங்கினர். முனைவர் இரா. திருமுருகனார் இலக்கியப் பொழிலின் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். தமிழ் மாமணி அரிமதி தென்னகனார், கலைமாமணி பாவலர் சித்தன், புலவர் கி.த. பச்சையப்பன், பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா, கலைமாமணி பாவலரேறு செவ்வேள், தமிழ்மாமணி புலவர் சீனு. இராமச்சந்திரன் கலைமாமணி கல்லாடன், பாவலர் துரை. மாலிறையன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தமிழ்மாமணி புலவர் இறைவிழியன் ஏற்புரை வழங்கினார். கலைமாமணி புலவர் பூங்கொடி பராங்குசம் நன்றியுரை வழங்கினார். விழா முடிவில் இனிய விருந்து அளிக்கப்பட்டது.

## அரியாங்குப்பம் தமிழிளைஞர் நற்பணி மன்றத்தின் பாராட்டு

1-1-2006 இல் அரியாங்குப்பம் தமிழிளைஞர் நற்பணி மன்றத்தின் உறுப்பினர்கள் இளைஞர்கள் நாற்பதுபேர் அளவில் தமிழ்மாமணி விருது பெற்ற புலவர் மு. இறைவிழியனாரைப் பாராட்டக் கம்பன் நகரில் உள்ள அவரின் இல்லத்திற்கே வந்துவிட்டனர். அவருள் பெரும்பாலானவர் அவர் தம் மாணவர்கள். அவர்கள் புலவர்க்குத் துண்டணிவித்தும் பரிசுகள், பழங்கள் தந்தும் பாராட்டினர். நிழற்படம் எடுத்தனர். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் புலவருடன் உரையாடி மகிழ்ந்தனர். நற்றமிழ்க்குரியபலரின் ஆண்டுக் கட்டணமாக உரு. 2000/- வழங்கினர். அவர்கட்குச் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பட்டன. நிகழ்வு புலவரின் நெஞ்சில் பெருமகிழ்வை ஏப்டுத்தியது. இளைஞர்கள் தம் தாய்மொழியின் மீது பற்றுள்ளவராக விளங்குகின்றனர் என்பதற்கு இஃது எடுத்துக் காட்டாக விளங்கியது.

## கலைமாமணி, நூற்கடல் தி.வே. கோபாலய்யர் அவர்கட்கு 80 ஆம் அகவை – முத்து விழா.

தி.ஆ. ௨0௩௭ நளி ௨௩ ஆம் நாள் (5-2-2006) திருச்சி, திருவரங்கத்தில் கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர் அவர்கட்கு 80 ஆம் அகவை நிறைவு விழா - முத்து விழா சிறப்பாக நடைபெற்றது. நூற்கடல் தி.வே. கோபாலய்யர் அவர்களும் அவர்தம் துணைவியார் உருக்குமணி அம்மையாரும் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிட நற்றமிழ் விழைகிறது; வேண்டுகிறது. - ஆசிரியர், இணையாசிரியர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-11

கூவிளம்+கூவிளம்+காய்

செம்மொழி நந்தமிழ் என்றறிந்தும்
செம்மனம் பெற்றிரா வேற்றினத்தார்
வம்பராய்க் கேடுற ஆள்வதனால்
நம்மின மாட்சிகள் மங்கிடுதே!
1. - பொறிஞர் அகன், திருச்சி.

வந்திடும் தேர்தலில் வாழ்விழந்து
நொந்திடும் மக்களை நீயுணர்வாய்
தந்திடும் கைப்பொருள் தாங்கியோரின்
சிந்திடும் வாக்கதால் சீர்பெறுவார்.
2. - புலவர் கோ. தனபாலன், வில்லியனூர்.

கந்தனை எண்ணிடக் கதிபெறலாம்;
கந்தனைக் கும்பிடக் கவின்பெறலாம்!
சிந்தனை ஒன்றியே சிவன்மகனை,
வந்தனை செய்திட வினையறுமே!
3. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

நற்றமிழ்க் காகவே நாவசைப்போம்;
நற்றமிழ் பாடியே நாமிருப்போம்!
கற்றிடா மாந்தரைக் கண்டெடுத்தே,
கற்றிடச் செய்வது கண்ணியமே!
4. - செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

பேயலை தன்னுடைக் கொடுந்தொழிலால்
வாயிலுள் போந்துயிர் கொள்ளையிட்டும்
கோயிலுள் தூங்கின கடவுளரில்
மாவிலைத் தோரணம் கேட்டவரார்?
5. - வில்லியன், புதுவை.

எத்துறை சார்ந்திருந் தாலுமவர்
எத்தனை தாம்மொழி கற்றிடினும்
முத்தமிழ் ஊடயன் மொழிகலவா
நற்றமிழ் வாணரென் னுயிரனையர்!
6. - திருவாணன், திண்டுக்கல்.

கோடுயர் நீள்வரை குளிரிமயம்!
நாடுயர் செம்மொழி நந்தமிழே!
பீடுயர் நன்னிலம் தமிழகமே!
ஏடுயர் மாமறை திருக்குறளே!
7. - புதுவை. ப. அங்கயற்கண்ணி, புதுவை.

சொல்லிசை கூட்டியே பாடுகின்ற
வில்லிசை ஈவது மாமகிழ்வே!
நல்லிசை நல்கிடும் பாடுவார்க்கே
எல்லவ ரும்பயின் றிடலெளிதே.
8. - வில்லவன். ப. முத்தமிழ்வாணன், புதுவை.

கம்பனும் வள்ளுவர் இளங்கோவும்
தம்மொழி யாம்தமிழ் சாற்றினரே!
நம்மவர் உள்ளதால் ஆட்சியிலும்
செம்மொழி யானது செந்தமிழே!
9. - கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

நற்றமிழ்த் தொண்டினால் இறைவிழியர்
கற்றவர் போற்றிடக் கமழ்கின்றார்!
உற்றவர் மற்றவர் உவந்தேத்தப்
பற்றுடன் பைந்தமிழ் பகர்கின்றார்!
10. - கவிஞர். கி. பாரதிதாசன், பிரான்சு.

அன்புடன் தாய்மொழி கற்றிடுவேன்
பண்புடன் தாய்மொழி போற்றிடுவேன்
நன்றுநம் தாய்மொழி வளர்ந்திடவே
என்றுமே தாய்மொழி பேசிடுவேன்.
11.- இரா. சிவமுருகன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

செந்தமிழ் கற்கவே படிக்கின்றேன்
எந்தமிழ் வாழ்ந்திட உழைத்திடுவேன்
செந்தமிழ் நாமெலாம் படித்திட்டால்
முந்துவோம் வாழ்வினில் முதலிடமே.
12.- செ. தமிழ்வாணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தாய்முலைப் பாலெனச் சுவைமல்கும்
தூய்புனல் ஊறிடும் பாலாற்றில்
பேய்மன ஆந்திரர் அணைகட்டும்
வாய்மையி லாச்செயல் தடுதமிழா!
13. - புலவர் மா.சு.மணி, திருக்கழுக்குன்றம்.

அன்பினால் தாய்மொழி வளர்த்திடுவோம்
பண்பினால் மக்களை மதித்திடுவோம்
பண்களால் பாடுவோம் விடுதலையை
என்றுமே கந்தனைத் தொழுதிடுவோம்.
14. - சே. இராசன், வைப்பூர்.

பூக்களின் நாற்றமே முகர்ந்திடுவோம்
பாக்களின் வார்த்தையைச் சுவைத்திடுவோம்
வாக்கினைக் காத்திட முனைந்திடுவோம்
நாக்கினைத் தூய்மையாய்க் காத்திடுவோம்.
15. - இரா. தையநாயகி, வேட்டவலம்.

இல்லினில் வாழ்ந்திடும் பூனைக்கே
இல்லையே இன்சுவை யரும்பு நாவில்!
புல்லரின் நெஞ்சினில் எண்ணத்தில்
நல்லவை வீழ்ந்திடும் தெரிந்திடுவாய்!
16. - மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

www.padippakam.com



நல்லதாய் உள்ளமே ஆனதெனில்
வல்லதாய் வாழ்வுமே வாய்த்துவிடும்
இல்லதென் யாவுமே பெற்றிடலாம்
சொல்வதென் வெல்லலாம் நற்புகழே!

17. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

வந்தது நற்றமிழ் மகிழ்விக்க
தந்தது தீந்தமிழ் தேன்கனியை
எந்தஓர் வார்த்தையால் இறைவிழியைச்
சிந்தையால் வாழ்த்துவேன் அறிகிலேன்நான்!

18. - கவிஞர் இனியன், குடந்தை.

மற்றவர் வாழ்ந்திட மகிழ்வினோடு
தெற்றெனப் பேசிடு தீமைநீங்க
கற்றவர் போற்றிடு கடமையாக
நற்றமிழ் ஆய்ந்திடு நன்மையாமே!

19. - புலவர் த. தட்சணாமூர்த்தி, தி.ரா.பட்டினம்.

செந்தமிழ்ச் சீரிலக் கணம்தொகுத்துச்
சிந்தைம கிழ்ந்திட அகராதி
தந்த'த மிழ்க்கடல்' வாழியவே!
நந்தமர் நூற்பயன் நாடுகவே!

20. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

பொங்கலோ பொங்கலோ எனக்கூறும்
மங்கல நாளுமே வந்ததையா!
திங்களோ திங்களோ சிலநாட்கள்
எங்கையோ எங்கையோ சென்றதையா?

21. - கவிஞர் வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

வெள்ளியை ஒத்தநல் அருவிகளும்
அள்ளிடச் செய்திடும் மலரினமும்
துள்ளியே சென்றிடும் மானினமும்
உள்ளிடைக் கொண்டது மலைநகராம்!

22. - த. கருணைச்சாமி, தேனி.

வந்தது பொங்கலும் மகிழ்ந்திடவே
சந்தன நாற்றமும் மணந்ததுவே
இந்தநாள் போலவே உலகெங்கும்
செந்தமிழ் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

23. - புதுவை நா. பொன்னுசாமி, புதுவை.

கொஞ்சமும் வஞ்சனை நினைந்திடாமல்
நெஞ்சிலே அன்பினை நிலைநிறுத்தி
நஞ்சினை வாக்கினில் கலந்திடாமல்
கொஞ்சிடும் செந்தமிழ் செப்பிடுவீர்!

24. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

ஆழ்கடல் சூழ்ந்திடும் இப்புவியில்
வாழ்வினை நல்விதம் வாழ்ந்திடவே
வீழ்வுறச் செய்திற தீதொதுக்கித்
தாழ்வறு நற்செயல் நாம்புரிவோம்.

25. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

தென்னிலங் கையெனும் நாட்டினிலே
இன்தமிழ் மக்களைப் படைஞர்தாம்
கொன்றிடும் செய்கையால் மக்களெல்லாம்
தென்தமிழ் நாடடை கின்றாரே!

26. - புலவர் அரங்க. பணிக்குன்றன், புதுவை.

வாக்குகள் கேட்கவே வந்திடுவார்
நாக்கினால் பொய்களை உரைத்திடுவார்
தாக்குதல் சொற்களால் நிகழ்த்திடுவார்
ஏக்கமும் தீர்ந்திட வழி செய்யார்.

27. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

வாழ்விலே முன்எழ நினைத்திடின்நீ
வாழ்விலே என்றுமே கல்விகற்பாய்
வாழ்விலே ஆழமாய்க் கற்றிடின்நீ
தாழ்விலா நன்னலம் பெறுவாயே.

28. - இர. சசிலா, திருக்கோவிலூர்.

கண்ணெனும் காலனின் கைப்பிடியில்
கண்டதும் காதலில் மெய்தருக்கிப்
பெண்ணுடன் போனஎன் அறிவினையே
மண்ணிலே விட்டிடு நல்மனமே!

29. - மு. சண்முகம், வந்தவாசி.

கற்றவர் காத்திடும் செந்தமிழே
மற்றவர் வாழ்த்திடும் முத்தமிழே
கற்றவர் வாழ்ந்திட நீயிருப்பாய்
பொற்புடை சீர்நிறை நற்றமிழே!

30. - மு. அருணகிரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கானலை நீரெனக் கருதியமான்
போனதோ கூற்றுவன் காலடியில்
தேனிலை நஞ்சடா மனுவறந்தான்!
தேனதாம் வள்ளுவ அமுதமுண்பாய்!

31. - த. குமாரசாமி எகதர், கருவூர்.

நீதிகள் நாட்டினில் கிடைத்திடவே
சாதியை நாட்டினில் அழித்திடுவோம்
சாதியின் தீமையை உணராமல்
சாதியைப் போற்றுவார் தமிழரல்லர்!

32. - இராமலிங்கம், வேட்டவலம்.

அன்புடன் வாழ்ந்திட நாட்டினிலே
இன்பளி கல்வியைப் பெற்றிடுவோம்
இன்றுநம் நாட்டினில் கற்றவர்கள்
என்றுமே போற்றுதற் குரியார்கள்.

33.- இரா. சிவமுருகன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

சொன்னதைச் செய்துமே பழகிடுவோம்
நன்னெறி நின்றுமே ஒழுகிடுவோம்
வன்முறை போக்கிட முனைந்திடுவோம்
என்றுமே இன்பமே வாழ்வினிலே!

34. - அதலை இராமன், மதுரை.

www.padippakam.com



எண்ணமும் செய்கையும் ஒன்றெனவே
அண்ணனும் தம்பியும் அன்புடனே
மண்ணினில் வாழ்ந்திடின் பகைவருமோ?
எண்ணுக எண்ணுக ஏற்புடைத்தே!
35.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை

சிந்தனை செய்திடும் செந்தமிழா!
நந்தமிழ் மூத்ததே மொழிக்கெல்லாம்
வந்தனை செய்துமே விளக்கிடுவாய்
செந்தமிழ் செம்மொழி உண்மையினை!
36. - புலவர். வேங்கடராசன், திருவரங்கம்.

நற்றமிழ் தந்திடும் நல்லிணக்கை
உற்றவர் பெற்றிடத் தந்திடலால்
பெற்றவர் பெற்றிடும் பேருவகை
மற்றவர் பெற்றிடல் இல்லெனலாம்.
37. - இளம்பூரணன், இரிசிவந்தியம்.

மங்கலம் பொங்கிடும் பொன்னிநதி
சங்கமே சார்ந்தநல் வைகைநதி
தங்கிடும் நல்வளக் கங்கை-நதி
எங்குமே ஊர்த்திடும் தாய்நாட்டில்!
38. - கவிஞர். பாலசந்திரன் சேகபு, வேலூர்.

முந்தைய யானைகொல் பேரதனைப்
பிந்தையர் மாற்றிய விந்தையென்னே
நிந்தையா மாகரி கால்கரியா
செந்தமிழ் சொற்பொருள் தேர்விலையா.
39. - மணிமொழியார், பொழில்வாய்ச்சி.

எண்டிசைச் சோலையும் சாலைகளும்
குன்றுவ தாயின புதுவையிலே
அன்றைஇ ராசனின் தோட்டமெங்கே
இன்குயில் ஓசைகொள் தோப்புமெங்கே.
40. - மு. இராம கனகராசன், புதுவை.

வந்தவர் வால்பிடித் தலையாமல்
நந்தமிழ் வாணரை வணங்கிடுவீர்!
செந்தமி ழோங்கிடச் செய்வதிலே
எந்தமிழ் மக்களே முனைந்திடுவீர்!
41. - அப்பரடிப்பொடி. ச. திருநாவுக்கரசு, முசிறி.

கல்வியைக் கற்றபின் கற்றபடி
நல்வழி வாழ்ந்திடா மனிதர்கள்
சொல்லொணாத் தீமணச் சாக்கடையில்
மெல்லவே நீந்திடும் பன்றிபோல்வர்.
42. - கவிஞர் மருத்துவர். பெ. போத்தி, மதுரை.

வன்மனத் துட்பகை வளங்கெடுக்கும்!
நன்மனத் தொற்றுமை நலம்பெருக்கும்!
அன்புனக் குற்றதாய்! அமைதிமிகும்!
உன்மனம் பற்றுவாள்! உவகைபெறு!
43. - கருவை. மு. குழந்தை.

கண்மணி என்றுனை நானழைப்பேன்
விண்ணொளி என்றெனை நீயழைப்பாய்
மண்ணுளார் நம்மினின் அன்பினையே
கண்ணுறல் கண்டிட நாணுகின்றேன்.
44. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்,

பற்றுடன் ஆங்கிலம் கற்பதைநீ
குற்றமென் றோர்கிலை கூன்தமிழா
நற்றமிழ் கற்றிட நடுக்கமுறின்
வெற்றிமேல் வெற்றியே பெறுவதுண்டோ?
45. - சீ.பெ. முத்துக்குமரன், கோவை.

எண்பது கூடிடும் நிலையினிலே
கண்களி ரண்டுமே மங்கினவே!
வண்டமிழ் வாழ்வினில் குன்றிடுமோ?
தண்டமிழ் இன்றியே என்செய்வேன்?
46.- ஆ.வே. இராமசாமி, வைரிசெட்டிப்பாளையம்.

பெற்றதும் என்னவோ சுதந்திரந்தான்
மற்றபின் வந்ததும் குடியரசாம்
கற்றவர் எத்தனை தொழிற்பெற்றார்
மற்றவர் எத்தனை வளம்பெற்றார்?
47. - சூலூர் கலைப்பித்தன்.

எங்களின் தாய்த்தமிழ்ப் பொங்கலம்மா!
எங்கணும் பொங்கிடச் செய்ததம்மா!
கங்குலை நீங்கிடச் செய்யுமம்மா!
எங்குல வாழ்வொளித் தெய்வமம்மா!
48. - வானவன், வெங்காலூர்.

பைந்தமிழ் மாணவர் உணர்வுடனே
பைந்தமிழ் பாடிடத் தூண்டிடுக!
பைந்தமிழ்த் தீஞ்சுவை உய்த்திடவும்
பைந்தமிழ்ப் பாவலர் ஊக்குவிக்க!
49. - அர. அருண்குமார், இரிசிவந்தியம்,

நீர்வளம் மிக்கநற் றமிழ்நாட்டில்
ஏர்வளம் கெட்டதும் எதனாலே?
ஊர்வளம் காத்திடா துறங்கினதால்
சீர்வளம் கெட்டது தெளிவீரே!
50. - சா. கண்ணன், புதுவை.

ஆடலும் பாடலும் நிகழ்ந்திடவே
கூடலால் ஊடலும் நீங்கிடவே
தேடலில் காதலும் பெற்றிடவே
பாடலால் ஏவுக விண்ணப்பம்.
51. - ப. திருமால், காட்டாங்குளத்தூர்.

ஈயென மொய்த்தவர் எச்சிலுக்கும்
நாயெனத் தாவுதல் ஏன்தமிழா?
தாயெனுஞ் செந்தமிழ் நல்லுணர்வில்
சேயென வாழ்பவர் தான்தமிழர்!
52. - மணிமேகலை குப்புசாமி, புதுவை.

www.padippakam.com



கொஞ்சியே என்னிடம் பேசியதால்
தஞ்சமாய் உன்வலை யில்வீழ்ந்தேன்
நஞ்சினை வைத்துநீ பேசியதால்
நெஞ்சமும் வெந்தது வாழ்வினிலே.
53. - அ. சோலைத் தென்றல், தென்நெற்குணம்.

பாரிலே நீயொரு செம்பருத்தி
காரிலே தீயென நான்வருந்த
ஊரினில் உன்பெயர் கேட்குதடி
சீரிடை கொண்டஎன் பூங்கொடியே!
54. - மு. அருணகிரி, பாதூர்.

உன்னிலே அன்பினைக் கண்டதாலே
என்மனம் என்னிடம் காணவில்லை
கண்ணிலும் நெஞ்சிலும் எப்பொழுதும்
எண்ணியே வாழ்ந்திடும் பெண்மயிலே.
55. - மு. சத்தியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பூக்களே எத்தனை வரம்பெற்றீர்
பூக்களாய்ச் சீருடன் வாழ்வதற்கு!
பூக்களே ஆயுளை மட்டும்நீர்
காக்கவே நெஞ்சினில் நினைவிலையே!
56. - மு. சிவா, செஞ்சி.

பைந்தமிழ் பேசிடும் பண்பாலே
எந்தமிழ் செந்தமிழ் மிளிர்ந்திடுமே
செந்தமிழ் வாழ்ந்திடச் செய்தாலே
வந்திடும் வாழ்வுகள் நமைநாடி.
57. - வே. மாயக்கிருட்டினன், கரசானூர்.

குண்டடி வாங்கியே செத்திடுவார்!
சண்டையில் நாட்டையே காத்திடுவார்!
அன்னியன் வென்றிட நினைத்தாலோ
சண்டியாய் மாறியே விரட்டிடுவார்!
58. - து. விவேகானந்தன், பு.மா.ஆ.ப.நிறுவனம்.

பெண்மையைப் போற்றியே வாழ்ந்திட்டால்
பண்புடன் வாழ்வினில் வாழ்ந்திடலாம்
உண்மையை நித்தமே நினைந்திடவே
பன்மையும் நீங்கியே வாழ்ந்திடலாம்!
59. - சு. அமுதா, திண்டிவனம்.

பந்தனை நால்வரின் வாழ்வினிலே
சந்தனம் வந்தது கண்டுகொள்வீர்!
சிந்தனை செய்திடு மனத்துள்ளே
வந்தனை செய்திடு வோம்சிவனை.
60. - சிவ.சி. சந்தானம், ஆலகிராமம்.

சாதியை நீக்கிடு, சாதித்துநில்
ஆதியில் ஏதடா சாதிப்பேய்
பாதியில் வந்தது நாட்டினில்வாழ்
கோதிலா மக்களைப் பிரித்ததுகாண்.
61. - கவிஞர். சசி, தோக்கவாடி.

பேய்மழை பெய்ததில் பெருவெள்ளம்
வாய்பிளந் தேபுலி கௌவுதல்போல்
பாய்ந்திடப் பல்லுயிர் பறிபோக
மாய்ந்தது மாவினம் மண்மேலே!
62. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

நற்றமிழ்ப் போற்றிடு நாடோறும்!
பற்றினை வைத்திடு பைந்தமிழில்!
கற்றவர் என்பவர் அன்னவரே!
மற்றவர் விற்றவர் மதியினையே!
63. - புலவர் சயராமன், கல்லை.

அன்புடன் பண்பினைச் சேர்த்திட்டாற்
றுன்பமே யண்டிடத் துனையென்று
மென்பினை மற்றவ ருயிர்பெறவே
யின்புட னிதலே சால்புனக்கே!
64. - இல. பொற்செல்வி, வெள்ளிமலை.

ஆட்சியிற் றாய்மொழி தமிழ்வேண்டின்
மீட்சியில் வென்றிடத் தமிழரெலாங்
காட்சியில் மட்டுமே காணாமல்
மாட்சியி லொன்றிட வேண்டுவனே!
65. - ச. தமிழ்ச்செல்வி, கள்ளக்குறிச்சி.

முனைவர் செந்தமிழ் மொழிதன்னை
இன்னுயி ராகவே கருதினரே!
பின்னவர் அன்னவர் பண்புதனை
இன்னமும் கைக்கொளா தேன்விட்டார்?
66. - சிலம்பூர்க் கிழான்.

எம்மினத் தாருமே இலங்கையிலே
விம்மியே வீழ்வதும் விலகிடவே
இம்மியும் இங்கிலை இனத்துணர்வே
தும்மிடின் தூற்றலாம் துலங்கிடவே!
67. - புலவர் த. ஆறுமுகம்.

நல்லவர் என்பதை நன்கறிந்து
வல்லவர் என்பது தெரிந்திருந்தும்
அல்லலைப் போக்கிடு வாறறிந்து
வில்லெனச் சென்றுமே வாக்களிப்பீர்.
68. - புலவர் அ. பக்கிரிசாமி, சுரக்குடி.

துன்பமா னால்எனை ஆற்றுவதும்
இன்பமா னால்உடன் மகிழ்வதும்
அன்பினால் காட்டிய உயர்நண்பா
என்றுமே உன்னைம றவேன் இனியே.
69. - சு. அருண் பிரசாத்து, தி.கோ.அ.க.கல்லூரி.

வானமே மின்னலில் துடித்ததுவே!
மானமே பாரினில் உயர்ந்ததாகும்
கானமே தென்றலில் உலாவருமே!
தானமே ஊரினில் சிறந்ததாகும்!
70. - இரா. காளிதாசு, விக்கிரவாண்டி.

படிப்பகம்

www.padippakam.com



ஈட்டியே வாழ்கநீ ஈகைநாடு
பூட்டிடா வீடுவாழ் ஏழைபோற்று
நாட்டுடன் உன்மொழி காத்துநிற்க!
ஓட்டிடு துன்பமே! உயர்ந்துமேநில்!
71. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

ஆட்சியர் நோக்கெலாம் அடக்குமுறை
சாட்சியர் அல்லவே நாமெல்லாம்
ஈட்டியாய் கொள்கையர் பாய்ந்திட்டால்
ஓட்டியே காட்டுவோம் பேயாட்சி.
72. - இதயகீதன், தேனி.

முன்பகை வெட்டிட முடிவெடுநீ
வென்றிட நின்றிடு ஒருமனதாய்
ஒன்றிடு தேர்தலில் தமிழனுக்கே
ஒன்றிதே என்பவர் நம்மவரே!
73. - அரு. மணிவாசகன், திருமருகல்.

கண்களைக் கண்களால் பார்க்கவைத்தாய்
உன்னையே என்னைநீ நினைக்கவைத்தாய்
கண்மணி கற்பனை காணவைத்தாய்
கண்டிடு கைக்கிளை என்றுரைத்தாய்!
74. - சி. சந்தானம், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

சீரினில் உண்மையே மேலோங்கும்
ஊரினில் ஒற்றுமை உறவாகும்
போரினில் வெற்றியே சிறப்பாகும்
பாரினில் கல்வியே உயர்வாகும்.
75. - இர. சக்திதாசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நிந்தனை சொல்வதை நீக்கிவிடில்
பந்தமாய் வாழ்வினில் பயனுறலாம்
சிந்தனை செய்துநாம் செயல்புரிந்தால்
செந்தமிழ் செம்மொழி சீர்பெறுமே!
76.- புலவர் கோ. இளங்கோபாண்டியன், புதுவை.

துள்ளுமே அன்பொலி கருணையினால்
வெள்ளமாய் பொங்கிடும் அருளமுதம்
வள்ளுவர் வள்ளலார் வாழுகின்றார்
உள்ளமே கோயிலாம் உணருவீரே.
77. - காரை. இளங்கம்பன், புதுவை.

கற்றவர் போற்றிடும் கவியிதழைப்
பெற்றுநற் செந்தமிழ்ப் பொலிவுபெறப்
பற்றுடன் பாடியே பயனுறநாம்
நற்றமிழ் அண்ணலை வாழ்த்துவமே.
78. - கவிஞர். அரச. ஈசுவரி இளங்கோ, புதுவை.

கந்தனே உன்னருள் பாடிடுவோம்
சிந்தனை என்றுமே உயர்ந்திடவே
நொந்துள என்மனம் நலமுறவே
சிந்தையில் இன்னலைப் போக்கிடுவாய்.
79. - ச. விசயலாவண்யா, திருச்சி.

நல்லடி வெற்றியின் தோழனாகும்
கல்வியே கண்ணிணை போன்றதாகும்
நல்வினை செய்திடு கல்விக்கே
செவ்வனே நீஎழு வேங்கையென!
80.- ம. பச்சையம்மாள், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பெண்களைப் போற்றிடு! இந்நாட்டின்
கண்களாய்க் காத்திடு கனிவுடனே!
பண்புடன் பாரினில் பிறப்பதற்குப்
பெண்களாய் மாதவம் செய்திடுக.
81. - மு. இரமணி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நன்னெறி ஓங்கிய நற்றமிழும்
பன்னெறி போற்றிய பழந்தமிழும்
முன்னிரு கண்ணென முத்தமிழும்
குன்றினில் கற்பது மயிலமதில்.
82. - த. அம்மு, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

இன்பமாய் வாழ்வதே நட்பென்றே
என்னுடன் நண்பனாய்ப் பழகியேஉன்
அன்பினை என்னுடன் பகிர்ந்தாயே
என்றுமே நான்உனை மறவேனே.
83. - சு. இளவேனிலரசன், திருக்கோவிலூர்.

தேர்தலில் நாடகம் ஆடிடுவார்,
மார்பினில் சந்தனம் பூசிடுவார்,
தேர்தலில் வெல்லுதல் தேர்ந்தகலை,
பார்தனில் எங்கணும் பார்க்கலாமே!
84. - நி. கோபி, மாமல்லபுரம்.

தென்றலாய் என்றுமே வீசிடுவாய்
அன்பினால் வெற்றிகள் தந்திடுவாய்
தன்னல மின்றியே அன்புதனை
என்றுமே தந்திடு நெகிழ்வுடன்நீ
85. - ப. நீலாவதி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பாட்டினில் பாரதி வார்த்தைதனை
ஏட்டினில் தோய்ந்திடும் எழுச்சியினை
ஊட்டியே பிள்ளையை வளர்ப்போரை
நாட்டினில் நல்லவர் என்போமே!
86. - இரா. மகாலட்சுமி, தி.கொ.அ.க.கல்லூரி.

கற்றதை கேட்டதை என்சொல்ல!
சொற்சுவை என்றுமே குன்றாது!
உற்றதை பெற்றதை நீயுமுற
நற்றமிழ் நூல்களைக் கற்றிடுவாய்.
87. - த. சாந்தினிபாய், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மற்றவர் சிந்தனை உயர்வுக்குக்
கற்றவர் ஆவலாய் எதிர்பார்க்கப்
பற்றுடன் என்றுமே சூழ்ந்தகாலை
உற்றவர் நெஞ்சினில் மறந்திடாதே!
88. - சு. திருநாவுக்கரசு, வீரப்பாண்டி.

என்னுடன் என்றுமே வாழ்ந்திடுவாய்
அன்பினை வாழ்விலே கண்டிடவே
உன்னுடன் புத்துயிர் பெற்றிடவே
இன்பமாய்ச் சேர்ந்திடு சிந்தனையில்.
89. - க. உமாமகேசுவரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நம்மொழி நற்றமிழ் எனமுழங்கு!
நம்மினம் நற்றமி ழினமுணரு!
நம்மறை நற்குறள் எனச்சாற்று!
நம்மினம் வாழ்ந்திட வழிகாட்டு!
90. - ச.ந. இளங்குமரன், நாகலாபுரம்.

வெந்ததே உண்பதாய் ஊழினையே
நொந்திடா மல்திரு வள்ளுவரைப்
புந்தியில் கொண்டிடு வென்றிடுவாய்
வந்திடும் தீதிலா நல்வாழ்வும்!
91. - மு. அமிர்தகடேசுவரர், திருச்சிராப்பள்ளி.

ஆற்றையும் ஊற்றையும் தடுத்தபடி
போற்றிடும் வீட்டினைக் கொடுத்தபடி
சேற்றினில் நீந்தியே சிரிப்போரைத்
தேற்றிடும் ஆட்சியை ஒழிப்போமே!
92. - எழிலன், சென்னை.

வான்புகழ் வள்ளுவன் ஈரடியில்
மாண்புடன் தேன்குறள் தந்ததனால்
வான்நிலம் எங்குமே தீந்தமிழர்
தேன்தமிழ் இன்சுவை உண்டிடுவார்!
93. - மெ. ஆறுமுகம், தியாகதுருகம்.

தோய்ந்திடு நல்லுணர் வோடெதையும்
வாய்ப்பொடு நாடியே புதியனதேர்
ஆய்வுகள் சீருற நடைபெறற்குத்
தாய்மொழிக் கல்வியைத் தந்திடுக!
94. - இசைவாணர் எ. சிவாநந்தம், பாகூர்.

காதலில் தோல்வியுற் றோரெல்லாம்
சாதலே என்றுமே முடிவென்றால்
வேதமாய்க் காத்திடும் காதல்கள்
பேதமாய் ஆயிடும் வாழ்வினிலே.
95. - சு. தென்றலரசன், திருவெண்ணெய் நல்லூர்.

காதலின் தீபமாய் நீவந்தாய்
காதலைத் தீயென ஏன்செய்தாய்
காதலை என்மனம் நாடாது
சாதலில் என்மனம் போகாதே!
96. - மு. சரவணன், பாகூர்.

கற்றதைப் போற்றிந் உலகினிலே
நற்றமிழ்ச் சீரினைப் பாடிடுவாய்
பொற்புடன் வாழ்வினைத் தொடங்கிடுவாய்
மற்றவர் எண்ணிட வைத்திடுவாய்.
97. - செ. சுபத்ரா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நம்மொழி நாட்டினில் நாடிடுவாய்
செம்மொழி நம்மொழி செந்தமிழாம்!
எம்மொழி ஈடிதற் கெங்குமில்லை
அம்மொழி வாழ்ந்திடத் தாங்குவமே!
98. - ந. நித்தியானந்தம், திருக்கழுக்குன்றம்.

நற்றமிழ் நாட்டினில் வளர்த்திடுவாய்
கற்றவர் உண்டெனக் காட்டிடுவாய்
உற்றவர் பெற்றவர் பேணிடவே
நற்றிறத் தொண்டினை ஆற்றிடுவாய்.
99. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

செந்தமிழ் பேச்சினில் இல்லையடா
செந்தமிழ் வீதியில் இல்லையடா
செந்தமிழ் கல்வியில் இல்லையடா
செந்தமிழ் நாடெனில் நகையாரோ!
100. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

செம்மொழி யாய்ப்புகழ் சீர்படைத்தே
நம்மொழி தாய்த்தமிழ் நாடிதனில்
எம்மொழிக் கும்உ யிர் மூச்சுயிர்ப்பாய்
வெம்மொழித் தான்கெட மேவிடுமே!
101. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்.

வள்ளுவர் செய்குறள் தாமுரைக்கும்
உள்ளுரை தேர்ந்தில ணொழுகிடுவார்
கொள்ளுவர் கொள்ளுவர் கோடிநலம்
கொள்ளுவர் மானுடம் போற்றிடுமே!
102. - அகரமுதல்வி, பொன்மலை.

நற்றமிழ் போற்றிடும் என்உளமே
சொற்றமிழ் பேசிடும் என்நாவே
நற்றமிழ் நாட்டவே பாரெங்கும்
பொற்புடன் வாழ்ந்திடும் வையகமே!
103. - வே.ம. பாலகிருட்டினன், தி.கொ.அ.க.கல்லூரி.

நின்மனம் நல்லன எண்ணிடுக
நின்மொழி நன்மொழி ஆயிடுக
நின்செயல் நற்பணி ஆற்றிடுக
நின்வழி நானிலம் நடையிடுமே.
104. - வே.இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

மாட்டினைப் பூட்டுவான் ஏர்பிடிப்பான்
ஓட்டுவான் செய்யினில் நெல்விளைப்பான்
மூட்டையைக் கட்டுவான்; ஏய்ப்போனின்
வீட்டினில் கொண்டுபோய் அடுக்கிடுவான்.
105. - மோ. கலாபன், சின்னசேலம்.

நெல்லினை வித்திடும் ஏர்உழுவன்
செல்லொணாத் தொல்லையில் வாழுகிறான்
கல்லினை வென்றிடும் மனதுடையர்
கொள்ளையால் நாட்டினை வீழ்த்துகிறார்.
106. - மோ. கலாநிதி, தேவபாண்டலம்.

www.padippakam.com



வாழ்விலே நல்லவர் நினைத்திடாத
தாழ்வினைத் தந்திடும் கெடுவினையே
சூழ்ந்திடும் வாழ்வினேன் யானென்றே
ஆழ்ந்திடும் உள்ளமே கொள்ளாதீர்.
107. - பக்கிரிசாமி, தி. ரா. பட்டினம்.

சேக்கிழார் காப்பியம் செந்தமிழர்
நோக்கிடத் தூண்டிடும் அன்புநெறி
ஆக்கிடும் ஆண்டவன் தொண்டராக
நீக்கிடும் சாதிகள் வேற்றுமையே.
108. - அ. இலக்குமணன், திருநள்ளாறு.

தாய்மொழி கல்வியின் உயிராகும்
தாய்மொழிப் பற்றவர் நாட்டுயிராம்
தாய்மொழிக் கல்வியே தாய்ப்பாலாம்
தாய்மொழி விட்டவர் ஏதிலியே!
109. - புலவர் அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

கோடெனத் தோன்றியோர் நற்றமிழர்
கேடெழும் என்பதை அறியாமல்
வீடெலாம் வேற்றவர் வெளிப்பாடே
மேடெனும் சீரிடம் விட்டனர்காண்.
110. - அய். இராவணன், நமச்சிவாயபுரம்.

பாரினில் கொல்தொழில் அழிந்திடவாழ்!
கூர்மதி மிக்கவர் ஆய்கநன்றாய்!
ஏர்த்தொழில் போற்றிடு சொல்வதைக்கேள்!
போர்க்குணம் விட்டிடு மனிதனாய்வாழ்!
111. - கு. கோவிந்தன், செங்கம்.

தாய்மொழிக் கல்வியில் தான்மேன்மை!
தாய்மொழி ஆட்சியில் தான்மாட்சி!
சேய்மொழி சுற்றிலும் சிறந்திருக்கத்
தாய்மொழி போற்றிடான் தமிழன்தான்!
112. - தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

எந்தமிழ் வாழ்ந்திட வேண்டுமெனச்
செந்தழல் மூண்டிடத் தன்னுயிரைச்
செந்தமிழ் வாழிய என்றுரைத்தே
நந்தமிழ் வீரனே மாண்டுயர்ந்தான்!
113. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

தந்தது தங்குக பொங்கலெனும்
அந்தமிழ் தங்களின் மாண்புயர்த்தி
வந்துறப் பெய்வதாய் வளர்கவெனத்
தந்தையான் வாழ்த்துவன் வாழியவே!
114. - புலவர். இடிமுரசார், சென்னை.

அன்பினை என்றுமே காட்டிடினும்
அன்னையே உண்மையால் காத்திடுவாள்!
அன்பையே வாழ்வினில் கொண்டிருந்தால்
இன்பமாய் வாழ்க்கையில் வாழ்ந்திடலாம்.
115. - தி. உருபன், தி.கொ.அ.க.கல்லூரி.

செங்கதிர் திங்களும் தாம்சிரிக்கப்
பங்கயம் அல்லியும் வாய்விரிக்கும்!
இங்குநீ அன்புசெய் மன்பதைகள்
பொங்கியே இன்பினில் பண்ணிசைக்கும்.
116. - காரை அறவாழி,.

கல்வியில் வெற்றிகள் குவிந்திடவே
நல்லதை எண்ணிட முயன்றிடுவாய்!
சொல்லினில் நற்பொருள் சுவைத்திடவே
கல்வியின் நுண்திறன் உணர்ந்திடுவாய்!
117. - மு. சக்தி, சென்னை.

வள்ளுவர் தம்மொடு வான்குறளை
உள்ளுவர் யாவரே ஆனாலும்
கொள்ளுவர் வள்ளுவர் ஆண்டென்னில்
அள்ளுவர் நற்பெயர் அவனியிலே!
118. - தெ. முருகசாமி, புதுவை.

சிங்கள நாடுறை செந்தமிழீர்!
எங்களை நம்புவீர்! ஒருநாளில்
தங்களைத் தாக்கிடும் சிங்களரை
மங்கிடச் செய்துமை விடுவிப்போம்.
119. - பொன். பசுபதி, புதுவை.

தெய்வமே என்றுமே நீதுணையே
உய்ந்திடும் நல்வழி காட்டுகவே!
பொய்யதும் என்றுமே வாழ்வினிலே
எய்வதும் கூடுமோ வெற்றிதனை!
120. - மு. மேகலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

சாதிகள் ஒன்றவே சேர்த்தாலும்
வாதிகள் சொற்களால் பிரிந்தோடி
நீதிகள் என்றுமே சேராமல்
ஓதியே சேர்க்கவே உள்ளாரோ!
121. - இரா. பிரகாசு, தி.கொ.அ.க.கல்லூரி.

கல்விகற் றோம்பியே கடைப்பிடித்து
நல்வினை யாற்றியே அறம்போற்றி
வல்வினை யகற்றிநம் வள்ளுவத்தின்
வெல்வினை தேர்ந்துயர் வெய்துவோமே!
122. - புலவர் செ. இராமலிங்கன், புதுவை.

வாடுமெம் பைந்தமிழ் வளர்ச்சியுறக்
கூடுக! கூட்டுக! சான்றோரைத்
தேடுக! பல்வழி பயனுறவே!
நாடுமே! நற்பெயர் நம்விழிக்கே!
123. - ஆ. அறிவரசன், புதுவை.

ஏங்கிடும் மக்களின் துயர்தீரத்
தூங்கிடும் போக்கினை நீக்கிடுக!
தாங்கிடும் தூணென வுருவெடுத்தே
ஓங்கிடும் வாழ்வினை அளித்திடுக!
124. - சோ. இளஞ்செழியன், புதுவை.

www.padippakam.com



தாழ்ந்திட வையகம் தூற்றிடுமே!
வீழ்ந்திட வையகம் மறந்திடுமே!
வாழ்ந்திட வையகம் போற்றிடுமே!
வாழ்ந்திடு வையகம் ஏற்றிடவே!
125. - சோ.அ. சுந்தரி, புதுவை.

வள்ளுவர் தந்தநற் குறளமுதைத்
தெள்ளிய செல்வமாய்க் கொண்டிடுக!
எள்ளுவ தாலதும் அழியாதே!
அள்ளுவ தாலது குறையாதே!
126. - சோ. கனிமொழி, புதுவை.

செந்தமிழ் நம்மொழி பேசிடுக
பைந்தமிழ் என்பதைச் சிறப்பித்தே!
இந்தியர் பண்ணிசை பாடிடுக
செம்மொழி ஆகிய தமிழுக்கே!
127. - பா. தனலட்சுமி, புதுவை.

எத்தனை ஈங்குமே ஈன்றயென்தாய்
கண்களில் நீர்வர ஒப்பிடாத்தாய்
தன்னலம் என்பதைக் காண்கிலாத்தாய்
அன்பினைப் பண்பினைப் போற்றுவமே.
128. - கடலூர் சசி.

ஏட்டிலே பெண்களை உடைகுறைத்து
வீட்டிலே பூட்டியே சிறையிலிட்டால்
நாட்டிலே நன்மைதான் விளைந்திடுமா?
பாட்டிலே போர்தொடு பாவலரே!
129. - இதயகீதன், தேனி.

மண்ணிலே தோன்றிய செந்தமிழைக்
கண்ணிலே தாங்கிய பைந்தமிழை
விண்ணிலே ஆடிடும் நம்தமிழை
வெண்ணிலா தாண்டியும் பரப்பிடுவோம்.
130. - வ.இர. புதியபரிதி, தேனி.

தன்னுயிர் நீப்பினும் தாழ்வடையார்
மன்னுயிர் காத்திட மகிழ்வுறுவார்
பொன்னிகர் பாரதம் பொலிவடையத்
தன்னிகர் தானெனும் தனித்தலைவர்!
131.- புலவர் உலோ. சுப்பிரமணியன், புதுப்பெருங்களத்தூர்.

வாய்த்துள கற்றிடும் பருவத்தில்
போய்ப்புறம் காதலைக் கற்பவர்கள்
தாய்மொழி போற்றிலர்; இவ்வுலகில்
வாழ்தலும் நீத்தலும் ஒன்றாகும்.
132. - இரா. சுரேசு, தி.கொ.அ.க.கல்லூரி.

கந்தனைப் போன்றொரு இறையுண்டோ?
மைந்தனைப் போன்றொரு பேறுண்டோ?
தந்தையைப் போன்றொரு உறவுண்டோ?
செந்தமிழ் போன்றொரு மொழியுண்டோ?
133. - ச. அருள்நேரு, கடலாடி.

வந்தவர் செந்தமிழ் நாட்டினரை
மந்திக ளாக்கினர் திரைப்படத்தால்
உந்தியில் பம்பரம் சுற்றுகின்றார்
புந்திய ழிந்தனர் தமிழிளைஞர்.
134. - ப. தங்கவேல், காளியப்பனூர்.

ஊனடி எப்படி இனிக்குதென்றாய்?
தேனடி நம்மொழி தமிழ்மொழியே
காணடி என்னுட லுமுயிருமாம்!
வானடி தாயவள் புகழெல்லை!
135. - க. அரசு, பெங்களூர்.

தாய்மொழிக் கல்வியே சிறந்ததென
வாய்மொழி வீரமாய்ப் பேசிவிட்டுத்
தூய்தமிழ்ப் பண்பினை விட்டுவிட்டுச்
சேய்மொழி ஆங்கிலத் தாள் விழுந்தான்.
136. - க. திருக்குறள் அமுது, கல்லக்குறிச்சி.

எண்ணிய காரியம் முடித்திடவே
திண்ணிய நெஞ்சினில் நீயிருந்தே
இன்னலை வாழ்வினில் களைவதுடன்
இன்பமே சேர்க்கவா இறையவனே!
137. - ச. சீதாலட்சுமி, புதுவை.

வான்மழை உற்றிட வளம்பெருகும்;
தேன்தமிழ் கற்றிடத் திறன்பெருகும்;
நூனெறி பற்றிட நடையுயரும்;
ஊனெறி யற்றிட உலகுயரும்.
138. - வே.ச. திருமாவளவன், சென்னை.

தாய்மொழி தந்திடும் கூர்மதியை
ஆய்ந்திடத் தாய்மொழி சீருறுமே!
ஓய்ந்திடா ஆய்வினால் செம்மொழியை
வாய்த்திடும் நற்பலன் என்றிடலாம்!
139. - மு. செந்தில்குமார், செஞ்சிக்கோட்டை.

வள்ளுவர் தந்திடும் நற்கருத்தை
உள்ளுவோர் வாழ்வினில் ஏற்றமுமே
பள்ளியில் கற்றிடும் கல்வியென
அள்ளியே தந்திடும் செல்வமென்பர்.
140. - இரா. சதாசிவம், மண்டகப்பாடி.

பண்பினில் சீருறும் பக்குவமே
பண்புடை மாந்தரின் பாங்கெனலாம்
கண்ணினும் மேலெனப் பண்பினையே
கண்ணிமை ஒத்திடக் காத்திடுவர்!
141. - க. கார்த்திகேயன், பனையபுரம்.

கல்வியே செல்வமாய் மாறிடலை
கல்வியால் ஏற்றமும் பெற்றிடலை
கல்வியின் கீர்த்தியைப் பெற்றவரே
கல்வியின் நேர்த்தியைச் செப்பிடுவர்!
142. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

www.padippakam.com



பெண்ணினைப் பொன்னெனப் போற்றியவர்
பெண்ணினத் தாழ்வினை நீக்கியவர்
கண்ணெனக் கல்வியைப் பெற்றிடலால்
பெண்ணினம் தன்குலம் காக்குமென்றார்.
143. - தி. மணிமேகலை, திருவாமாத்தூர்.

வித்தகர் பற்பல கற்றிடுவர்
எத்தனை கற்றவர் ஆயிடினும்
சித்தனை ஒத்திடும் புத்தியராய்
அத்தனை தாழ்வினைக் கொண்டிடுவர்.
144. - பா. சத்தியா, வடலூர்.

விண்ணுடன் மண்ணுமே சேர்ந்திடவே
பண்ணினால் பாட்டுமே சீர்பெறல்போல்
மண்ணகம் மாமழை பெற்றிடுமே!
விண்ணகம் காரினைக் காத்திடுமே!
145. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

அண்ணனும் தம்பியும் போலிருந்தே
எண்ணருங் காரியம் செய்தனரே!
மண்ணினைக் கண்ணெனக் காத்ததனால்
மண்ணவர் எண்ணியே போற்றுகின்றார்.
146. - தி. தமிழ்க்கொடி, ஆசனூர்.

சட்டமாய்ப் பட்டமும் பெற்றவரே
மட்டமாய்ச் சென்றிடக் கற்றுளரே
பட்டமும் சட்டமும் பெற்றதனால்
கொட்டமும் உம்மிடம் உள்ளதுவே!
147. - தி. உசா திருநாவுக்கரசு, திருவாமாத்தூர்.

நீரினும் நேரிய தூயவராய்ச்
சீரினைச் சீர்பெறப் பெற்றவரே
பாரினைக் காத்திட முற்படுவர்
யாரினை அன்னவர் பண்பினுக்கே!
148. - இரா. அரங்கநாதன், குப்புசாமி நகர்.

'ஆ'வினம் தாயினம் ஒத்ததுவே!
'கோ'வினம் கோவினை ஒத்திடுமே!
'பா'வினம் 'பா'வினை யாத்திடுமே!
மாவினம் மாந்தரின் மாண்பினதே!
149. - செ. பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

கண்களால் பேசியென் உள்ளத்தின்
அன்பினை ஏட்டினில் பதிப்பித்தேன்!
வெண்ணில வாகிய வளர்பிறைபோல்
என்னிடம் அன்பினை அருள்வாயே!
150. - கு. தாமோதரன், தி.கொ.அ.க.கல்லூரி.

வீதியில் போட்டிடும் குப்பையையும்
சாதியில் ஏற்படும் பிரிவினையும்
பாதியாய் நின்றிடும் மனிதனையும்
ஆதியாய் நீக்குதல் சிறந்ததாகும்.
151.- ச. அன்னை அற்புத மேரி, தி.கொ.அ.க.கல்லூரி.

அல்லவை நீக்கிட நாள்தோறும்
நல்லவை செய்கவே மானிடரே!
தொல்வினை நீங்கிட என்றென்றும்
கல்வியைக் கற்கவே மானிடரே!
152.- அ. அண்ணாதுரை, தி.கொ.அ.க.கல்லூரி.

சில்லென வீசிய பனிக்காற்றால்
மெல்லவே பேசிய மலர்க்கொடியே
மெல்லிய உன்விழி மேகத்தால்
சொல்லடி காதலை என்உயிரே!
153. - மு. ஆனந்தன், தி.கொ.அ.க.கல்லூரி.

நற்றமிழ் மாதிகை ஆசானே
கற்றவர் ஆற்றலை வெளிக்கொணர
நற்றமிழ் ஏட்டினில் விதிகூறிச்
சொற்றமிழ் யாப்பினை வளர்க்கின்றீர்.
154. - இர. தமிழொளி, ஏமப்பேர்.

தாய்மனம் போன்றிவண் உறவுமில்லை
தாய்மொழிக் கீடிவண் எதுவுமில்லை
வாய்மொழித் தேன்குறட் கீடுமில்லை
சேய்பொழி தேன்மொழிக் கீடுமில்லை.
155. - வீ. வில்வநாதன், வெங்காளூர்.

இன்பமாய் வாழ்வினில் வளர்ந்திடுவோம்
அன்பினால் மற்றவர்க் குழைத்திடுவோம்
என்றுமே வாழ்க்கையில் கொண்டாட்டம்
அன்னையின் நற்குண அரவணைப்பே!
156. - சு. இரேவதி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

செந்தமிழ் நாட்டினை உயர்த்திடவே
பந்தமும் பற்றுமே வளர்த்திடுவோம்
அந்தமும் ஆதியும் அறியாத
கந்தனைக் கைகளால் வணங்கிடுவோம்.
157. - ம. செயலட்சுமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

எத்தனை ஆண்டுகள் உனைவளர்த்தேன்
இத்தனை சாதனை செய்வதற்கோ!
முத்தெனப் புன்னகை வீசியதும்
பித்தனாய்க் காதலைத் தேடுவதோ?
158. - உமா, கோவிந்தசாமி க.க.திண்டிவனம்.

தென்றலாய் உன்முகம் பார்த்திடவே
இன்பமாய் என்மனம் பூத்திடுதே
அன்பினை உன்னிடம் சேர்த்திடவே
என்உயிர் என்றுமே காத்திருக்கும்.
159. - இரா. செயந்தி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கற்றவர் என்றுமே தமிழாலே
நற்றமிழ் என்றொரு இதழினைத்தன்
பெற்றமாய் ஒட்டியே செல்லும்உன்
முற்றமாய் விண்புகழ் பெற்றாயே!
160. - த. பார்த்திபன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

படிப்பகம்

www.padippakam.com



உன்னிலே ஏற்படும் அன்பதனால்
என்னிலே என்றுமே நீஇருப்பாய்
என்உயிர் வாழுமே உன்னுடனே
என்மனம் தாங்குமா நீஅழுதால்.
161. - சங்கர் கணேசு, கருவம்பாக்கம்.

வாழ்வினில் கண்களே கல்வியென்று
மூழ்கினால் நீங்குமே துன்பமெலாம்
வாழ்நெறி தந்திடும் செந்தமிழே
வாழ்ந்திடும் ஆண்டுகள் உன்புகழே.
162. - கு. நதியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அன்புடன் தாய்மொழி கற்றிடுவோம்
என்றுமே தாய்மொழி பேசிடுவோம்
பண்ணிலே தாய்மொழி வளர்த்திடவே
பண்புடன் தாய்மொழி போற்றிடுவோம்
163. - சொ. நதியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கண்ணெனச் சொல்லியே காலமெலாம்
பண்ணென ஆனது கண்டீரோ!
பெண்ணினைப் போற்றிவாழ்ந் திட்டாலே
மண்ணிலே உய்யுமாம் வாழ்க்கையதே.
164. - கோ. வித்யாதாரணி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

ஆட்சியில் பற்பல புகழ்சேர்க்கக்
காட்சியில் நல்லதே செய்வதுபோல்
ஆட்சியை மீண்டுமே அமைப்பதற்கு
மாட்சியில் லாதவர் முயல்கின்றார்!
165. - இரா. சரண்யா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

காதலி யின்விழி பார்த்துவிட்டான்
காதலில் வீழ்ந்தவன் எழவில்லை
காதினில் காதலி சொல்லென்றால்
காதலன் தன்நிலை புரிவதில்லை!
166. - கா. நீலவேணி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

சீரிளந் தென்றலே வீசாதோ
வேரிளங் காய்ப்பலா காய்க்காதோ
போரிடுங் காளையர் ஈழத்தில்
நேரிடும் வெற்றியே காண்பாரே!
167. - புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

செந்தமிழ் மக்களோ சீரிழந்தார்
நொந்திடு மாறவர் நோயுற்றார்
சொந்தபண் பாடெலாம் தோற்றிட்டார்
வந்தவர் தந்தனர் கேடுகளே.
168. - செ.அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

ஏய்த்தெவர் வாழினும் சாய்வாரே
வீழ்த்தியே நல்லவர் வாழ்வினையே
தூர்த்தவர் எப்படி நிற்பார்கள்
சாய்த்தவர் நின்றிடும் நேர்மையதே.
169. - இல.அ. அகத்தியன், சிறுமிளை.

வந்தவர் வாழ்வுபெற் றார்தமிழர்
நிந்தனை பேசியே தேய்கிறார் நீ
நொந்துமே நூலென ஆவதுவோ?
சிந்தனை செய்திடு வாய்இதனை!
170. - இ. காசிலிங்கம், சிறுவம்பார்.

இங்குள மாந்தரின் அருங்குணத்தை
மங்கிடச் செய்யுமிவ் வரசியலார்
உங்களை நோக்குவர் வாக்கிற்காய்
எங்கணும் நல்லவர் வரச்செய்வீர்.
171. - சு. இலம்போதரன், சென்னை.

நல்லுளம் பெற்றிடு வோம்இனிமேல்
அல்லலை நீக்கியே வாழ்ந்திடுவோம்
வல்லமை பெற்றிடும் நம் தமிழே
சொல்கிறேன் நானுமி தைத்தெரிந்தே.
172.- புலவர் இ. சிவதாசன், தி.கொ.அ.க.கல்லூரி.

இன்புடன் நல்லறம் செய்வித்தே
அன்புடன் வாழ்வதால் வாழ்வின்கண்
நண்புடன் நற்புகழ் நீ பெற்றே
என்றுமே வாழ்ந்திடு மகிழ்வாக!
173. - பா. பாலாமணி, தி.கொ.அ.க.கல்லூரி.

நற்றமிழ் நற்கவி எழுதவேண்டும்
கற்றலே நம்தொழில் உணரவேண்டும்
பெற்றவள் நற்குணம் அறியவேண்டும்
சுற்றமே உன்னிடம் தேடிவரும்.
174. - வி. திருமாவளவன், அழகாபுரம்.

வாழ்ந்திடும் வாழ்வெலாம் முயற்சியினால்
தாழ்ந்திடும் மக்களே அழிந்திடுவர்
வீழ்ந்திடும் நாட்களில் இறைவனையே
ஆழ்ந்திடும் சிந்தனை வேண்டுமிங்கே!
175. - க. இளமதி, தி.கொ.அ.க.கல்லூரி.

ஏற்றதே என்னுளம் தமிழ்த்தலைவ!
தூற்றுவர் தீயவர் ஆதலால்நீ
தேற்றமாய் என்னைஉன் உள்ளத்தில்
ஏற்றருள்; ஏற்றிடின் போற்றிடுவேன்.
176. - க. அன்புக்கோகிலா, சென்னை.

செந்தமிழ் சீர்பெறக் கவிபாடு!
கந்தனைக் கும்பிடு பக்தியோடு!
நிந்தனை செய்தலை நீக்கிவிடு!
இந்தியா ஓங்கிடப் பாடுபடு!
177. - ப. விசயகுமார், தி.கொ..அ.க.கல்லூரி.

செந்தமிழ் நைந்திட விடுவாரோ
மைந்தரும் தந்நிலை உணராரோ
வந்தவர் போனவர் மொழிநாடிச்
சொந்தமி ழுந்திவர் திரிவாரோ.
178. - மு.வே. கங்காதரன், சென்னை.

www.padippakam.com



நாற்றுகள் காற்றிலே அசைந்தாட
வீற்றிருந்(து) இன்பமாய்க் காண்பேன்நான்!
தூற்றுவோர் வார்த்தையோ பொசுங்கிடவே
ஏற்றுவேன் செய்கையால் நன்மையினை!
179. - இ. தாவிதுபிரபாகர், புதுவை.

கேடுறு குழலைக் கீழ்த்தள்ளி
நாடுறு செம்மொழி நலம்நாடி
ஆடுக! பாடுக! அகமகிழ்வாய்ப்
பீடுறு நன்னிலை பிறங்கிடவே!
180.- புலவர் திருக்குறள் நாவை. சிவம், மணப்பாறை.

வன்முறை யாளரின் கொடுஞ்செயல்கள்
இன்னலைத் தந்திடும் ஆழிமழை
மின்னலாய்ப் பூமியில் அதிர்வலைகள்
என்செய என்றுளம் தளராதே!
181. - அரிமா. இளங்கண்ணன், சென்னை.

செந்தமிழ் கற்றவர் வளமுடனே
செந்தமிழ் நாடிதில் வாழ்ந்திடவே
செந்தமிழ் கற்றவர் பணிதானே
வந்துதான் சேர்ந்திடின் உறுதியாமே!
182. - செ. சந்தோச குமார், பண்ணுருட்டி.

பொய்களை நம்பிடப் பொருத்தமுடன்
பொய்யுரை ஆரியர் பொய்க்கதைகள்
பெய்துநம் மாந்தரின் பீடழியச்
செய்தனர்! நாமவை தெளிந்திலமே!
183. - ச. தேன்மொழி சண்முகம், கரூர்.

பேருடல் ஆவியைப் பெரும்பொருளைச்
சீரை, நற் பேரினைச் சிறப்புகளைக்
கூரிய அம்பெனக் கொன்றொழித்துப்
பேரிடர் பெய்திடும் மதுவொழிப்போம்!
184. - பு. சித்திரா புகழேந்தி, கருவூர்.

காய்கனி கீரைதேன் கலந்தினிதாய்த்
தாய்முதல் சேய்வரை சாப்பிடலோ
நோய்களே அண்டிடா நூறாண்டு!
வாய்ச்சுவை விட்டுநல் வாழ்வுறுவோம்!
185.- முத்தமிழ்ச் செம்மல் மு. குறளகன், கருவூர்.

கல்வியால் காசினைப் பறிப்போர்கள்
அல்வழிப் போக்கினர் வன்கொடியர்
அல்லலை மற்றவர் படச்செய்து
குல்லகம் நாட்டினை உய்ப்பவர்காண்.
186. - க. திருக்குறளரசு, கல்லக்குறிச்சி.

தன்னுடை ஆற்றலை நம்பாமல்
தன்னுடைப் பிள்ளையை அரசாசான்
உன்னதம் பெற்றிட வேண்டிவேறோர்
ஒன்னலர் பள்ளியில் சேர்ப்பதேனோ?
187. - க. திருக்குறட்பாவை, கல்லக்குறிச்சி.

இன்பமும் துன்பமும் வாழ்க்கையில்
என்றுமே மாறிவ ருவதியல்பு!
துன்பினை அன்பினால் அகற்றிடலாம்
நன்றுமே வாழ்வினில் மகிழ்ந்திடலாம்.
188. - கு. அம்மச்சி, காலூர்.

ஆழ்ந்திடும் அன்பினால் ஒன்றுகூடிச்
சூழ்ந்திடும் சோதனை யைஎதிர்த்து
வாழ்வினைக் காதலால் வென்றிங்கு
வாழ்கவே காதலர் வளமுடனே!
189. - அ. செயபால், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

தேர்தலில் வெல்வதே குறிக்கோளாம்
யார்அர சாளுதல் எனும்போட்டி!
ஊரவர் காதுகள் செவிடாகும்!
பாரினில் ஏழையைப் பார்ப்பாரோ?
190. - கூத்தரசன், புதுவை.

நேயமும் நேர்மையும் இல்லோரே
வாய்மையும் கூறுதல் அற்றோரே
தூய்மையி லாமனங் கொண்டோரே
சேயென தெய்வமும் வந்திடுமோ?
191. - விசயகுமார், சென்னை.

இன்பமே கண்டதும் இன்முகத்தே
துன்பமே கண்டதும் வன்முகத்தே
எண்ணியே வாழ்வினைத் தூற்றுவது
நன்மதி நம்மிடம் தேய்ந்ததுவால்?
192. - கு. சுரேசு, திண்டிவனம்.

இல்லறம் நெஞ்சினில் விளங்கிடவே
நல்லறம் செய்கிற மனைவியுடன்
நல்வினை வாழ்வினில் எய்திடவே
சொல்லுடன் நற்செயல் செய்திடுக!
193. - சொ. நித்தியா, திண்டிவனம்.

செந்தமிழ் இன்றுமே ஓங்கியதால்
நந்திடாப் பற்றுடன் போற்றிடுவோம்
செந்தமிழ்ச் சிந்தனை பெற்றிடவே
கந்தனின் வாழ்த்தினை வேண்டிடுவோம்.
194. - சு. சங்கீதா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பொங்கிய பாலெனப் புன்னகையும்
எங்குமே சீர்மிகும் தமிழ்மொழியும்
தங்கிடும் நல்லுள இளைஞர்காள்
தங்கமாய் என்றுமே மின்னிடுவீர்!
195. - வை. இராச பாரதி, தி.கொ.அ.க.கல்லூரி.

அன்பினில் ஆட்படச் செய்ந்தாயைத்
தென்றலாய் நின்றுநான் காத்திடுவேன்!
என்றுமே வாழ்வினில் சிறப்பதற்கும்
என்னையே ஒப்படைத் துக்கொள்வேன்
196. - ஏ. மணிகண்ணன், தி.கொ.அ.க.கல்லூரி.

www.padippakam.com



ஏனா ஏனடா பேசுகின்றீர்?!
தேனெனச் சாதியைக் கொள்வீரோ?
சாதியைச் சார்ந்துமே திரிவீரோ!?
வீணென ஓட்டுவோம் வருவீரோ!?

197. - அருள்நிதி. செ. இலிங்கானந்தபாரதி, நெய்வேலி.

ஊர்ப்பசி தீர்க்கவா! உன்தலைவர்
தேர்தலில் நிற்கிறார் செப்பிடுநீ!
சீர்த்தமிழ்க் கல்வியை நாடெங்கும்
பார்க்கவள் வாக்கெனப் பாடுகநீ!

198. - பாவலர் பாக்கம். பிரதாபசிம்மன், பூவை.

## பாடல் படைத்திடுக வஞ்சி விருத்தம் - 12

உண்ணான் உதவான் வாழ்வானே
மண்ணில் இழிந்தோன்; செல்வத்தால்
எண்ணிப் பசிநோய் தீர்ப்பானே
விண்ணும் புகழும் மேலாவான்.!

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : மா+மா+தேமாங்காய்
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஓரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 28-2-06 க்குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்

## இளம்பாவலர்க்கு !

தி.கொ.அ.க. கல்லூரியின் ஓர் இளம்பாவலர் தன் கொடுத்தபடி தொடுத்த பாடலின் கீழ் by எனக் குறிப்பிட்டிருந்தார். ஆங்கிலத்தில் ஒரு மடல் எழுதி அடியில் 'இவண்' என எழுதும் பழக்கமுண்டா? அவரே அம்மடலில் From, D/o A.R. Pin என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார். இவை அறிந்து செய்யப்பட்டவை அல்ல. பழக்கத்தால் ஏற்பட்ட தவறுகளே. அம்மாணவர் வருத்தம் அடைதல் கூடாது. திருத்தம் பெறுதல் வேண்டும் என்பதே நற்றமிழின் கருத்து. அவர் மட்டும் அல்லர். பலர் இப்படி எழுதுகிறார்கள். ஆனால் முதிர்ந்தவரை விடுவோம். மாணவர் முயன்றால் மாப்புகழ் நம் மொழிக்குச் சேர்க்கலாம். - ஆசிரியர்.

## நாகாலபுரம் திருவள்ளுவர் மன்றம் 13–ஆம் ஆண்டு விழா

தி.ஆ.உ0ங௪எ தை உ ஆம் நாளில் (15-1-2006) திருக்குறள் தொண்டர் ச. சிவசங்கரனாரின் புகழ் பரப்பும் நாகாலாபுரம் மொழிஞாயிறு பாவாணர் திடலில் நாள் முழுதும் மாணவர்க்கான திருக்கறள் ஒப்பித்தல் போட்டி, பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. திரு. பாண்டியன், ஆசிரியர் மு. பொன்னையா தலைமை ஆசிரியர் வீ. கிருட்டிணசாமி, திரு. க. இராமசாமி, திரு. பெ. இராசா, கவிஞர் இதயகீதன், கவிஞர் இரா. சீ. தமிழறிவு ஆகியோர் பங்கேற்றனர். கலைமாமணி கல்லாடன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திருவள்ளுவர் மன்ற அமைப்பாளர் செயல் மறவர் ச.ந. இளங்குமரன் செயலுரை வழங்கினார். திரு. ப. முத்துக்குமார் நன்றியுரைத்தார். திருவள்ளுவர் மன்றப் பொறுப்பாளர்கள் சீருற விழாவினை நடத்தினர். நாகலாபுர மக்களையும் திருவள்ளுவர் மன்றப் பொறுப்பாளர்களையும் நற்றமிழ் பாராட்டுகிறது.

www.padippakam.com



# இலக்கை அடைய இணைந்து செயலாற்றுவோம்



**– ந. அரங்கசாமி, முதலமைச்சர்**

புதுவை மாநில மக்களுக்கு எனது உளம் கனிந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும் இந்தியராகிய நாம் அனைவரும் உணர்வுப்பூர்வமாக ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடையும் நன்னாள் இது. இந்த நன்னாளில் ஒருங்கிணைந்த சுதந்திர இந்தியா என்கிற கோடிக்கணக்கான இந்தியர்களின் கனவு நனவாகப் போராடி வெற்றிக்கண்ட உன்னதத் தலைவர்களின் தியாகங்களை பெருமையுடன் நினைத்துப் போற்றுவது நமது கடமையாகும்.

நமது குடியரசை நிறுவிய முன்னோர்கள் விவேகமுள்ளவர்கள். அகில இந்திய குடிமைப்பணி ஆங்கில ஆட்சியின் சொத்தாக இருந்த போதிலும், நமது குடியாட்சியைத் திறம்பட நடத்த அத்தகைய சேவை ஒன்று நமக்குத் தேவை என்பதை அங்கீகரித்தார்கள். இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் ஒருமுறை, “சிறந்த அகில இந்திய குடிமைப்பணி நமக்கு இல்லையென்றால் ஒருங்கிணைந்த இந்தியா நமக்கு இருக்காது. இந்தப்பணிக்குத்தான் தாங்கள் நினைத்தவற்றை வெளிப்படையாகச் சொல்லும் சுதந்திரம் உள்ளது. ஏதேச்சதிகார ஆட்சியைவிட ஜனநாயக ரீதியிலான ஆட்சியில் தான் திறமையான, ஒழுக்கமுள்ள, நேர்மையான சேவைகள் கிடைக்கும்'' என்று சொன்னார். ஒரு மக்கள் அரசு கொண்டு வரும் நல்ல திட்டங் களை அடித்தட்டு மக்கள் வரை கொண்டு சேர்க்கும் பொறுப்பு இதற்குத் தான் உண்டு. இதுதான் குடியாட்சியின் அடிப்படையான அம்சமாகும்.

இந்த தேசம் தங்களுக்குச் சொந்தம் என்று ஏழை மக்களும் உணரும் வண்ணம் இந்தியாவை உருவாக்கவும் அவ்வாறு உருவாக்கு வதற்கு மக்களும் இணைந்து பங்காற்ற வேண்டும் என்பதை அவர்கள் எண்ணும் வகையிலும் தொண்டாற்றிய பண்டித சவகர்லால் நேரு, அவர் வழியில் வந்த அன்னை இந்திராகாந்தி, மக்கள் தலைவர் ராசீவு காந்தி இன்னும் ஏனைய தலைவர்கள், என்றும் நினைவில் வைத்து போற்றத்தக்கவர்கள்.

பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கு அவர்களின் நல்லாசியோடும் அன்னை சோனியாகாந்தி அவர்களின் வழிகாட்டுதல் படியும் நேர்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை குடியாட்சித் தத்துவத்தின் அடிப்டையில் வழங்கி வருகிறது எனது தலைமையிலான இந்த மக்கள் அரசு.

www.padippakam.com








## புதுவை அரசு

**வேளாண்மை & கால்நடைப் பராமரிப்பு**

- ❖ வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் விவசயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர், பவர் டில்லர் மற்றும் மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் வழங்கும் திட்டம்.
- ❖ விவசாயிகள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு குறைந்த வாடகையில் மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் உழவர் உதவியகங்கள் மூலம் வழங்கும் திட்டம்.
- ❖ வேளாண் தொழிலாளர் நலன் காக்க வேளாண் தொழிலாளர் நலச்சங்கம் தொடக்கம்.
- ❖ இயற்கைச் சீற்றத்தினால் சேதமடையும் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 4,000 ஈட்டுத்தொகையாக வழங்கப்படுகிறது. காப்பீட்டுத் தொகை பெறும் வகையில் முழுப்பாதிப்புச் சான்றிதழ் அளிக்கப் படுகிறது.
- ❖ சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 3,750 வீதம் உடனடி இழப்பீட்டுத் தொகையாக ரூ. 28.78 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் ஹெக்டேருக்கு ரூ. 60,000 வீதம் பாதிக்கப் பட்ட உவர்நிலங்களைச் சீரமைப்பதற்காக புதுவைப் பகுதிக்கு ரூ. 60 இலட்சமும் காரைக்கால் பகுதிக்கு ரூ. 2.90 கோடியும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ விவசாயிகள் மாட்டுக்கொட்டகைக் கட்ட ரூ. 2500 வரை மானியம்.
- ❖ சுய உதவிக்குழுக்கள் மூலம் கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வாங்க அவற்றின் விலையில் 75 விழுக்காடு மானியம்.

**உட்கட்டமைப்பு வசதிகள்**

- ❖ மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்திய திட்டக் குழுவிடமிருந்து ரூ. 1410 கோடி.
- ❖ சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் ஒரு கோடியகா உயர்வு.
- ❖ சேதராப்பட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் சுங்கவரி இல்லாத் துறைமுகம் உருவாக்கப்படுகிறது.
- ❖ நிலத்தடி நீரை மேம்படுத்த ரூ. 34.74 கோடி செலவில் 84 ஏரிகள் புனரமைப்பு.
- ❖ புதுச்சேரி நகர் மற்றும் புறநகர் பகுதிகளுக்கென ரூ. 221.5 கோடி செலவில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.
- ❖ மாஹே பகுதிக்கு குடிநீர் வழங்க ரூ. 15 கோடியில் அஞ்சரைகண்டித் திட்டம்.
- ❖ கோதாவரி ஆற்றிலிருந்து ஏனாமிற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஆந்திர அரசுடன் ஒப்பந்தம்.
- ❖ சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ரூ. 4.50 கோடி செலவில் உயர்மட்டப்பாலம்.
- ❖ சன்னியாசிக்குப்பம் மற்றும் சில்காரிபாளையம் நிலத்தடி நீர் மேம்பாட்டுக்காக ரூ. 1.06 கோடியில் படுகை அணை.
- ❖ புதுச்சேரியைக் குடிசைகளற்ற மாநிலமாக மாற்ற பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு வீடுகட்டும் திட்டம் அறிமுகம். இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 7,500 வீடற்ற ஏழைகளுக்குத் தலா ரூ. 40,000 மானியம் மற்றும் சுகாதார கழிவறை கட்ட ரூ. 10,000 மானியம்.

**சமூக நீதி காக்க மிகவும் பிற்படுத்தப்பட்ட**

No. 12107 / DIP / PRA / Press / 2005 - 06

படிப்பகம்

www.padippakam.com



     

**சமூக நீதி**

- ❖ கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு 27 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காடாக உயர்வு. இதில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 20 விழுக்காடு இட ஒதுக்கீடு.
- ❖ இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதிதிராவிட மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இதர மக்களுக்கு மூன்று சென்ட் அளவில் இலவச மனை வழங்கப்பட்டுள்ளன.
- ❖ கலப்புத் திருமணம் ஊக்குவிப்புத் தொகை ரூ. 10,000-இல் இருந்து ரூ. 15,000 ஆக உயர்வு.
- ❖ 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு இலவச கைலி, துண்டு, புடவை மற்றும் ரவிக்கைத்துணி வழங்கும் திட்டம்.
- ❖ நலிவுற்ற கலைஞர்களுக்குத் தவில் மற்றும் நாதஸ்வரம் வழங்கும் திட்டம்.
- ❖ மூத்த குடிமக்களுக்கு ஆண்டுதோறும் ஒரு போர்வையும் ஒரு ஜோடி காலணிகளும் வழங்கும் திட்டம்.

**மாணவர் & இளைஞர் நலன்**

- ❖ இந்தியாவிலேயே முதன்முறையாக "ஸ்ரீ ராஜீவ் காந்தி காலைச் சிற்றுண்டித் திட்டம்", "ஸ்ரீ ராஜீவ் காந்தி மாலைச் சிற்றுண்டித் திட்டம்", மற்றும் "திறமையுள்ள விளையாட்டு மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம்".
- ❖ 9-ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ-மாணவியருக்கும் இலவச மிதிவண்டி மற்றும் ஒன்று முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ - மாணவியருக்கு இலவசக் குடை வழங்கும் திட்டம்.
- ❖ மாணவ - மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகம், எழுதும் சுவடிகள், மழை அங்கி மற்றும் காலணிகள் வழங்கும் திட்டம்.
- ❖ மருத்துவம், பொறியியல், கல்வியியல் பயிலும் மாணவ - மாணவியரது கல்விக் கட்டணத்தில் 60 விழுக்காடு மானியமாக வழங்கும் படிப்பு உதவித் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம்
- ❖ அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ - மாணவியரின் பொதுத்தேர்வுக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டம்.
- ❖ விளையாட்டு வீரர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆயுள் காப்பீடு வசதி.
- ❖ இளைஞர்கள் தொழில் தொடங்கள் ரூ. 2 இலட்சம் வரை கடன் உதவி, இதற்கான வட்டித்தொகையினை 5 வருடங்களுக்கு அரசே செலுத்தும் திட்டம்.
- ❖ படித்த, வேலையில்லாத, அரசு வேலைவாய்ப்பு வயதுவரம்பைக் கடந்த இளைஞர்கள் இறைச்சிக் கோழிப்பண்ணை, முயல் பண்ணை, ஜப்பான் காடைப் பண்ணை, 6 கறவை மாடுகள் கொண்ட பால் பண்ணை மற்றும் ஆட்டுப் பண்ணை அமைக்க 75 விழுக்காடு மானியம் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் அளிக்கப்படுகிறது.
- ❖ அரசு துறைகளில் மட்டும் சுமார் 13,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

**வகுப்பினருக்கு 20% இடஒதுக்கீடு**

வெளியீடு : செய்தி மற்றும் விளம்பரத் துறை, புதுச்சேரி அரசு

படிப்பகம்

www.padippakam.com



# செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

❖ தனித் தமிழ்ப் புலவர் சி.பொ. பழனிவேலனார் நினைவேந்தல் நிகழ்வு 10-12-2005 இல் மன்னார்குடி வட்டம் எக்கலில் அன்னாரின் படத்திறப்புடன் நடைபெற்றது.

❖ கடலூர்க் கவிச்சித்தர் க.பொ. இளவழுதி தமிழ்ப்பணி அறக்கட்டளையின் பரிசளிப்பு, பாராட்டு, நூல் வெளியீட்டுவிழா ஆகியன சிறப்பாக நடைபெற்றன. கவிச்சித்தரின் படைப்புகள் ஒரு கணிப்பு - என்ற திறனாய்வு நூலைக் கலைமாமணி கல்லாடன் அவர்கள் வெளியிடப் புலவர் பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய் அவர்கள் பெற்றார். தமிழ்மாமணி புலவரேறு அரிமதி தென்னகனார் சிறப்புரையும் புலவர் மு. அழகப்பனார் பாராட்டுரையும் வழங்கினர்.

❖ 8-1-2006 இல் முத்தரையர்பாளையம் செம்படுகை நன்னீரகத்தின் சார்பில் காற்று மண்டலத்தைப் பாழ்படுத்தும் நச்சுப்புகையில்லாப் போகி - சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பரப்புரை மிதிவண்டிப் பயணம் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்மாமணி நற்றமிழ் ஆசிரியர் மு. இறைவிழியனார் மிதிவண்டிப் பயணத்தைத் தொடங்கி வைத்தார். புதுச்சேரியின் பல்வேறு இடங்களில் பரப்புரை சிறப்பாக நடைபெற்றது. செம்படுகை நன்னீரக நிறுவனத் தலைவர் கு. இராம்மூர்த்தி ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார். சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

❖ 11-1-2006 இல் புதுவைத் தமிழ் இலக்கிய ஆய்வுக் கழகத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் பொங்கல் விழாக் கவியரங்கமும் கருத்தரங்கமும் சிறப்பாக நடைபெற்றன.

❖ தி.ஆ.உ0௲௬ சிலை உஅ (12-1-2006) ஆம் நாள் நண்பர்கள் தோட்டத்தின் சார்பில் புதுச்சேரி நாட்டுப்புறக் கலைஞர்களின் உருவம் தாங்கிய தமிழ்நாள்காட்டி வெளியீட்டுவிழா திரு சுந்தர முருகன் தலைமையில் நடந்தது. நாள்காட்டியையும் புதுவை யுகபாரதியின் அரசமரம் நூலையும் செந்தமிழ்க் காவலர் தொல். திருமாவளவனார் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். திருநாவுக்கரசு வரவேற்புரை யாற்றினார்.

❖ தி.ஆ.உ0௲௬ சிலை உ௯ ஆம் நாள் (13-1-2006) பூரணாங்குப்பம் சிற்றூர் வானொலி இளைஞர் நற்பணி மன்றமும் சிந்தனை மறுமலர்ச்சிப் பேரவையும் இணைந்து தமிழர் பொங்கல் திருநாள் விழாவை நடத்தின. தமிழ்ச்சான்றோர் பலரும் பங்கேற்றனர்.

❖ தி.ஆ.உ0௲எ சுறவம் உ ஆம் நாள் (15-1-2006) திருமழபாடித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது. திருவள்ளுவர் பட ஊர்வலம் நடந்தது. திருக்குறள் கூறிய மாணவர்க்கு இனிப்பு, எழுதுகோல், அறி ஆகியன தரப்பட்டன. விழாவில் கலந்து கொண்டார்க்குப் பொங்கலும் சுண்டலும் வழங்கப்பட்டன. தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் அ. ஆறுமுகம் விழாவினைச் சிறப்புற நடத்தினார்.

❖ தி.ஆ.உ0௲எ சுறவம் உ ஆம் நாள் (15-1-2006) புதுச்சேரிக் குறளாயத்தின் சார்பில் பாவலர் கோ. இளங்கோபாண்டியன், புலவர் ஆறு.

www.padippakam.com



அரங்கண்ணல் ஆகியோரால் திருவள்ளுவர் திருநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார் தலைமையில் கருத்தரங்கமும் கலைமாமணி சித்தனார் தலைமையில் பாட்டரங்கமும் பேராசிரியர் மா.இலெ. தங்கப்பா தலைமையில் ஆய்வரங்கமும் நடைபெற்றன. ஆய்வரங்கில் முனைவர் இரா. திருமுருகனார் முனைவர் இராச. திருமாவளவன் வழக்குரைஞர் க. முனுசாமி ஆகியோர் பங்குபெற்றனர். மேலும் பாவலர் பலரும் தமிழன்பர்களும் பங்குபெற்று விழாவினைச் சிறப்பித்தனர்.

❖ தி.ஆ.உ0௬௭ சுறவம் உ ஆம் நாள் (15-1-2006) புதுச்சேரிப் பேருந்து நிலையத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்குப் புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் மாலை அணிவித்தார்கள். தமிழ்ச்சான்றோர் பலரும் திரளாக வந்து மாலை அணிவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

❖ தி.ஆ.உ0௬௭ சுறவம் அ, ௯ ஆம் நாளில் (21, 22-1-2006) மணப்பாறையில் மணவைத் தமிழ்மன்றப் பொன்விழா மாநாடு சிறப்பாக நடைபெற்றது. செந்தமிழ் அந்தணர் புலவர் இரா. இளங்குமரனார், அறிவியல் அறிஞர் மணவை முசுதபா, தோழர் இரா. நல்லகண்ணு, கவிஞர் க. வேழவேந்தன் மேலும் தமிழறிஞர் பலரும் பங்கு பெற்றனர்.

❖ 21-1-2006 இல் புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் வள்ளுவரும் வள்ளலாரும் என்ற தலைப்பில் கோ. இளங்கோ பாண்டியன், கோ. புகழேந்தி, செ. இராமலிங்கன் ஆகியோர் பாடினர். பாடிய பாவலர் மூவர்க்கும் குறள் நெறிச்செம்மல் என்ற விருது வழங்கிப் பாராட்டினார். மாநிலங்களவை மேனாள் உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் மற்றும் சிலரும் பாராட்டுப் பெற்றனர்.

❖ தி.ஆ.உ0௬௭ சுறவம் கரு ஆம் நாள் (29-1-2006) சென்னை உலகத்திருக்குறள் வாழ்வியல் நெறிச்சங்கத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழா, திருவள்ளுவர் திருவீதிஉலா, தொடக்க அரங்கம், பாராட்டரங்கம், பட்டிமண்டபம், பரிசளிப்பு அரங்கம் என்னும் நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

❖ 5-1-2006 இல் புதுவைத் தூய மீட்பரின் அன்னை இல்லத்தில் புதுவைத் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் சார்பில் பாவலர் க. தமிழமல்லனார் தலைமையில் விருது பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. பாவலர் அ. உசேன் வரவேற்புரை வழங்கினார். முன்னாள் முதல்வர் இரா.வே. சானகிராமன், ச.ம.உ., திருவாளர் ஆ.மு. கிருட்டினமூர்த்தி, மு.எ.ச. தலைவர் இரா. இராமச்சந்திரன், கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் இரா. தேவராசு ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பாவலர் பலர் பாராட்டுப் பாடல் வழங்கினர். தமிழ்மாமணி மு. இறைவிழியன், கலைமாமணி பூங்கொடி பராங்குசம், புலவர் அரங்க. நடராசன், திருவாளர் சுதர்சனன், தமிழ்மாமணி அரிமதி. தென்னகன், திருவளார் இளம்பாரதி, திருவாளர் ஞா. ஆண்டோ, பாவலர் அ. உசேன், பாவலர் பாரதிவாணர் சிவா, புதுவைத் தமிழ்நெஞ்சன் ஆகியோர் பாராட்டுப் பெற்றனர். தமிழ்மாமணி மு. இறைவிழியன் ஏற்புரை வழங்கினார். பாவலர் ப. திருநாவுக்கரசு நன்றியுரைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

"நாளங்கள்" ; ஆசிரியர் : கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதி, வெளியீடு : கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதி தமிழ்ப்பணி அறக்கட்டளை, கடலூர் - 607 001; விலை : உரு. 35/-

இந்நூலில் 'கனலி' தொடங்கித் 'துளித்துளி' ஈறாக நூற்று மூன்று தலைப்புகளில் பாக்களை வழங்கி இருகிக்றிர் நூலாசிரியர் கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதியார். பாக்கள் அனைத்தும் சங்க கால இலக்கியங் களை நினைவுபடுத்தும் முறையில் நல்ல தமிழ்ச்சொற்கள் கையாளப் பட்டு அமைந்துள்ளன. சமுதாயச் சீர்கேடுகளாகிய குருதி நாளங்கள் அடைபட்டுப் பல தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருப்பதை நாளங்கள் மூலமாகச் சீர் செய்யும் வகையில் பாக்கள் நறுக்குத் தெறித்தாற்போல் உள்ளன. காட்டுக்குச் சில அடிகள்.

"பொறுப்பை மறக்கும் போக்கும் நோக்கும்
காகிதப் புகையுடன் களிதேன் எடுக்கப்
போகிப் புகையுடன் போவதற் கொப்பாம்."

"சிறைவைக் காதே சிந்தனைத் திறத்தை
உறைய விடாதே உணர்வோட் டத்தை"

"இறைவன் என்பவுன் எவனென வினவின்
முறையறிந் தாண்ட முன்னவன் என்க"

தாய்மொழி ஒதுக்கிச் சேய்மொழி கற்போர்
நாய்மடிப் பாலையர் நக்கிக் குடித்தார்.

இவைபோன்ற வைர வரிகள் அனைத்துப் பாடல்களிலும் மிளிர்கின்றன. "நாளங்கள்" தமிழர்களுக்குப் புத்துணர்வை உண்டாக்கும்.

"வெல்லும் தமிழியக்கம்" ; ஆசிரியர் : புலவரேறு அரிமதி தென்னகன்; வெளியீடு : முத்துப்பதிப்பகம், 27, வில்லியம் லே-அவுட் (வரை-நிலம்) 2 ஆவது தெரு, கே.கே. சாலை, விழுப்புரம் - 605 602; விலை : உரு 54/-

இந்நூலில் தூங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பும் பொருட்டு "நேற்று எனத் தொடங்கி" "விழி, எழு, உழை" என முடிய இருபததிரண்டு தலைப்புகளில் இனிய பாடல்களை, எளிய நடையில் அளித்திருக்கிறார் நூலாசிரியர் புலவரேறு அரிமதி தென்னகனார்.

தமிழினத்தின் நேற்றைய நன்னிலையை உணர்த்தி இன்றைய இழிநிலையை எடுத்துக்காட்டி, நாளை நாம் செயல்பட வேண்டிய நிலையை நூலின் தொடக்கத்திலேயே மனம் வருந்தித் தன் உள்ளக் கிடக்கையைக் கொட்டி வைத்திருக்கிறார் நூலாசிரியர். தமிழின் இன்றைய நிலையை,

"ஆங்கிலம் முக்கால் அரைக்காலே தாய்மொழியாம்
ஓங்கும் பிறசொல் உறவாம் எனப்பலரும்

www.padippakam.com



ஒன்றும் புரியா(து) உளறலே பேச்சாக
நன்றே வளர்ப்பர்; நலமோ தமிழினமே!"

"பாடும் இசையரங்கம் பற்றி நினைத்தாலோ
வாடும் மனமெல்லாம் வண்ணத் தமிழ்த்தாய்க்குக்
கல்லறையைக் கட்டிக் களிப்பர்! தெலுங்குமொழி
நல்லாட்சி அங்கே நடக்கும் தமிழினமே!"

எனச் சுட்டிக் காட்டியிருப்பது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போலாகும். நூல் முழுவதும் தமிழியக்கம் வெற்றி பெறத் தமிழினத்தை "விழி, எழு, உழை" என்று உணர்வூட்டி எழுப்புகிறார் நூலாசிரியர் புலவரேறு அரிமதி - தென்னகனார். இந்நூல் நூலாசிரியரின் 125 ஆம் படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

"வாணிதாசனார் வெண்பா மாலை"; ஆசிரியர்: பாவலர் தேவி. திருவளவன்; வெளியீடு : முனைவர் திருதேவிதாசனார் அறக்கட்டளை வெளியீடு, 30, முதல் தெரு, திருமுடி நகர், புதுச்சேரி - 605 001; விலை : உ.ரு. 5/-

இயற்கை எழிலை ஓவியமாகப் பாடல்களில் படைத்தளித்த நயமிகு பாவலர் வாணிதாசனாரின் புகழை உலகறியச் செய்யும் பொருட்டு "வாணிதாசனார் வெண்பா மாலை" என்னும் இச்சிறிய நூலைப் படைத்திருக்கிறார் பாவலர் தேவி. திருவளவன்.

வாணிதாசனாரின் தொன்னூற்றோர் அகவையைக் குறிக்கும் வகையில் தொன்னூற்றொரு வெண்பாக்களில் கவிஞரேறு வாணிதாசனாரின் வரலாற்றைப் புகழ்ப் பூக்களாக ஆக்கி மாலை தொடுத்துள்ளார் நூலாசிரியர். வெண்பாக்கள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. வெண்பாவில் நெருடல் இல்லாச் சொல்லமைப்பு இயல்பாய் அமைந்துள்ளது. இந்நூல் சிற்றிலக்கிய வரிசையில் இடம் பெற வேண்டிய நூலாகும்.

**"உணர்வுகள்"** : ஆசிரியர் : புலவர் அய்யா மோகன், க.மு., கல்.மு., வெளியீடு : நம் தமிழய்யா பதிப்பகம், தமிழ்க்குடில், 51 கரியப்பா நகர், கல்லக்குறிச்சி - 606 202; விலை : உ.ரு. 30/-

நூலாசிரியர் புலவர் அய்யா மோகன், நாடு, மொழி, இனம் பற்றிய இன்றைய நிலையினை எண்ணித் தன் உணர்வுகளை நாற்பத்து நான்கு மரபு பாடல்களில் அமைத்தளித்திருக்கிறார்.

இந்நூலில் "எம்மக்கள் தாய்மொழியை ஏற்றிடவே எண்ணுவரோ, அம்மக்கள் வாழ்நாடே நாடு" எனத் தாய்மொழியின் நிலையை எடுத்துக் கூறி, "ஈடில்லாச் செம்மொழிக்குக் கேடு தனைத் தேடுகின்ற பேடுகளை வீழ்த்துவதே பேறு" எனும் குறட்பாவில் செம்மொழிக்குக் கேடு செய்யும் பேடிகளை வீழ்த்த வேண்டும் என்று தன் உள்ளத்துணர்வுகளைக் கோடிட்டுக் காட்டுகிறார் நூலாசிரியர் புலவர் அய்யா மோகன். இந்நூல் தமிழர் உள்ளத்தில் புத்துணர்வையூட்டும்.

- புலவர் செ. இராமலிங்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# விருதுக்குப் பெருமை சேர்த்த வித்தகர்

**எழுச்சிப் பாவலர் பாரதி வசந்தன்**

'நற்றமிழின்' ஆசிரியர்; நாளும் தமிழ்வளர்க்கும்
பொறுப்புடைய நெஞ்சின் புகழ்மறவர் - அற்புதமாய்ப்
பிச்சேரி மண்ணில் பெருமைகள் சேர்த்திட்டார்
நிச்சயம் வாழ்வார் நிலைத்து.

அன்புடை உள்ளம்; அதிர்ந்தே எவர்மனமும்
புண்படச் செய்யாப் புதுவடிவம் - என்றுமே
பண்புநலம் மாறாத பக்குவம்; நம்மிடையே
இன்பமுடன் பெற்றார் இவர்.

பொதுவாழ்வில் நேர்மை; சிலரைப்போல் இங்கே
முதுகுகாட்டி வாழா முதன்மை - எதுவரினும்
ஏற்கும் துணிச்சல் ; இவைதாம் இறைவிழியன்
சேர்த்த தமிழின் சிறப்பு.

'தமிழ்மா மணிவிருது' தாங்கியே நன்றாய்
அமிழ்தான மேன்மை அடைந்தார் - தமிழ்போல்
அவரால் விருதுக்கே அந்தப் பெருமை
இவர்போல் எவருண்டோ இங்கு.

இறைவிழியன் என்னும் இனிய மனிதர்
குறைவிலா நன்மைகள் கொள்க - நிறைவாய்
வளமான யாவுமே வாழ்வினில் சேர
நலமாகப் பாடினேன் நான்.



## மணமக்கள் வாழ்க!



❖ தி.ஆ. உ0௩௬ நளி உ௬ ஆம் நாள் (11-12-1005) பாகூர் நற்றமி மூன்பர் இசைவாணர் திரு. எ. சிவாநந்தம் - கத்தூரிபாய் இணையரின் மகன் செல்வன் சிவ. கணியன்பூங்குன்றன், அரியாங்குப்பம் திரு. சீ.கி. கணேசன் - மலர்விழி இணையரின் மகள் செல்வி சீ.கி.க. கீதா (எ) இசைமதி ஆகிய இருவருக்கும் அரியாங்குப்பம் பொன். மிருட்டிணா விருத்தாம்பாள் திருமண நிலையத்தில் ஆய்வறிஞர் ப. அருளியார் அவர்கள் தலைமையில் இனிய தமிழ்த் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது.

\- ஆசிரியர்.

www.padippakam.com



## தமிழ்மாமணி விருதளித்த புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கட்கும் விருது பெற்ற புலவர் மு. இறைவிழியன் அவர்கட்கும் பாராட்டு விழா

தி.ஆ.உ0௩௬ தை சிலை உ௪ ஆம் நாள் (8-1-2006) புதுச்சேரி சொக்கநாதன் பேட்டைத் தமிழ்த் திருமண மாளிகையில் தமிழ்மாமணி விருதளித்த மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கட்கும் விருது பெற்ற புலவர் மு. இறைவிழியனார் அவர்கட்கும் பாராட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி, ஓய்வு பெற்ற மாவட்டக் கல்வி அலுவலர் புலவர் பெ. சயராமனார் தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. முப்பதுக்கும் மேற்பட்ட புலமைமிக்க பாவலர்கள் பாராட்டுக்குரியோரைப் பற்றிப் பாடல் வழங்கினர்.

அறிவியல் ஆசிரியர் திரு. கோ. தாமரைக்கோ அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. அறுபதுக்கு மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் தம் உணர்வுகளை உரியவகையில் சுருக்கமாகக் கூறினர். ஆசிரியர் திரு. சீனு. அரிமாப்பாண்டியனார் அவர்கள் தலைமையில் பாராட்டு அரங்கம் நடைபெற்றது. பெரும்புலவர் ஆ. சிவலிங்கனார், முனைவர் இரா. திருமுருகனார், மேளாள் ச.ம.உ திரு. செ. முத்து, சொல்லாய்வறிஞர் ப. அருளியார், பேராசிரியர் அ. பசுபதி, மருத்துவர் மு. உத்திராபதி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் குரு. பன்னீர் செல்வன், கல்வித்துறை இணை இயக்குநர் அ. இராமதாசு ஆகியோர் சீரிய பாராட்டுரை வழங்கினர்.

புலவர் மு. இறைவிழியனார் மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கட்கும் வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆ. நமச்சிவாயம் அவர்கட்கும் பொன்னாடை போர்த்திப் பரிசு கேடயம் வழங்கினர். 'தமிழ்மாமணி' விருது பெற்ற புலவர் மு. இறைவிழியனாரின் வாழ்க்கை வரலாறும் அவரைப் பற்றிய தமிழ்ச் சான்றோரின் வாழ்த்துக்களும் அடங்கிய புலவர் மு. இறைவிழியனார் வாழ்வும் பணியும் என்ற நூலை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் வெளியிட மாண்புமிகு ஆ. நமச்சிவாயம் அந்நூலைப் பெற்றார்.

மாண்புமிகு முதல்வர் புலவர் மு. இறைவிழியனார் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பரிசு கேடயம் வழங்கினார். மாண்புமிகு முதல்வரும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரும் புலவரைப் பாராட்டிச் சிறப்புரை ஆற்றினர். சான்றோர் பலரும் புலவர்க்குச் சிறப்புச் செய்தனர். விழாவினைச் சிறப்புற நடத்தியதற்காகச் சீனு. அரிமாப் பாண்டியனார் மாநில முதல்வர் அவர்களால் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்பட்டார்.

விழாமுடிவில் இனிய விருந்து படைக்கப்பட்டது. விழா சிறப்புற நடைபெற்றதாக அனைவரும் பாராட்டினர்.

AIR MAIL
www.padippakam.com

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண்: புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம்: த.நா / அ.து.த 128 / 06-08. திங்கள் தோறும் 15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) / 128/06-08. Posted at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. SSP / PY / 128 / 06-08**

பெறுநர் :

திரு.

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**







## புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

ப.மு.தொ.க. நிறுவனர் வளாகம் (PIPMATE) இலாசுபேட்டை, புதுச்சேரி - 605 008.

நானும் தமிழும் / திங்கள் தோறும் இரு கவிஞர்கள் நிகழ்ச்சி கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

22-02-2006 சங்க இலக்கியத்தில் இசை - அரிமளம் சு. பத்மநாபன்
01-03-2006 வள்ளுவம் - ப. மருதநாயகம்
08-03-2006 இரு கவிஞர்கள் - கோ. கருணாகரன், பரிதிவேங்கடேசன்
15-03-2006 நம்பிக்கைகளா, மூடநம்பிக்கைகளா? - ச. பிலவேந்திரன்

ப. மருதநாயகம், இயக்குநர்.

| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது.
தொலைப்பேசி : (0413) 2203765 கைப்பேசி : 98942-25129

Printed by **N. Elampuranan**, Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan**, Telephone : (0413) 2203765 **Cell : 98942 - 25129**